# பாட்டாளி சிந்தனை


Volume 25 No. 2

October 2014

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


## உயர்மட்ட நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனம்

# நிர்வாகத்தின் கரங்கள் அளவுக்கு மீறி நீள்வது நிர்வாக பாசிசத்தைக் கொண்டுவருவதற்கான புதிய முயற்சி

உயர்நீதிமன்றங்கள் மற்றும் உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் நியமனம் தொடர்பாக சமீபத்தில் இந்தியாவில் காரசார விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக உயர்மட்ட தேர்வுக்குழு (Collegium - கொலிஜியம்) அமைப்பின் மூலமாகத்தான் உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர். நீதிபதிகளால் நீதிபதிகள் நியமனம் என்று பரவலாக அழைக்கப்படும் இந்த முறையில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனங்கள் 5 பேர் கொண்ட உச்சநீதிமன்ற கொலிஜியத்தாலும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் 3 பேர் கொண்ட உச்சநீதிமன்ற கொலிஜியத்தாலும் தேர்வு செய்யப்பட்டு வந்தனர். இந்த இரண்டு உயர்மட்டத் தேர்வுக்குழுவிற்குமே தலைவராக இந்தியத் தலைமை நீதிபதியும் உறுப்பினர்களாக நீதிபதிகளும் இருப்பர்.

### கொலிஜியமா அல்லது என்ஜெஏசியா?

ஆனால் சமீபத்தில் இந்த அமைப்பில் தொய்வு ஏற்பட்டது. முந்தைய இந்தியத் தலைமை நீதிபதி ஆர்எம் லோதா செப்டம்பர் 2014இல் ஓய்வு பெற இருந்ததைத் தொடர்ந்து அடுத்த தலைமை நீதிபதியைத் தேர்வு செய்வதற்காக, 4 பேர் அடங்கிய பட்டியலை உயர்மட்டத் தேர்வுக்குழு மே 2014இல் அளித்தது. அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருந்த முன்னாள் தலைமை வழக்கறிஞர் கோபால் சுப்பிரமணியம் பெயரை மத்திய சட்ட மற்றும் நிதி அமைச்சகம் நிராகரித்தது. மற்ற மூவரது பெயர்களை குடியரசுத்தலைவரின் அனுமதிக்காக அனுப்பி வைப்பதற்கும் ஒப்புக்கொண்டது.

அதோடு நீதிபதிகள் நியமனத்தில் தற்போது இருக்கக்கூடிய கொலிஜியம் அமைப்பை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக வெளிப்படைத் தன்மை ஊழலை ஒழித்தல் என்ற பெயரில் தேசிய நீதிபதிகள் நியமன கமிஷன் (NJAC – என்ஜெஏசி) மூலம் நீதிபதிகளை நியமனம் செய்யும் புதிய முறையைக் கொண்டுவருவதாகவும் அறிவித்தது. அவசர அவசரமாக, தேசிய மற்றும் பிராந்திய அளவிலான, கிட்டத்தட்ட அனைத்து பெரிய கட்சிகளின் ஆதரவோடு, ஆளும் கட்சியான பாஜக இரண்டு புதிய மசோதாக்களைக் கொண்டுவந்து அவற்றை இரண்டு அவைகளிலும் நிறைவேற்றியது. தேசிய நீதிபதி நியமனங்கள் மசோதா 2014, இதுவரை இருந்து வந்த கொலிஜியம் அமைப்பிற்கு சாவு மணி அடித்துவிட்டது. கொலிஜியம் அமைப்பை ஒழித்துவிட்டு அதற்குப் பதிலாக அரசியலமைப்பு ரீதியாக சுமூகமாக என்ஜெஏசி முறையை அறிமுகப் படுத்துவதற்கும் 121வது அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதா கொண்டுவரப்பட்டது.

இந்த என்ஜெஏசியின் தலைவராக இந்தியத் தலைமை நீதிபதியும், உறுப்பினர்களாக இரண்டு மூத்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், மத்திய சட்ட அமைச்சர், இரண்டு புகழ்பெற்ற மனிதர்கள் (இதில் ஒருவரை தாழ்த்தப்பட்ட, பழங்குடி, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பு, சிறுபான்மையினர் அல்லது பெண் பிரிவிலிருந்து பிரதமர், இந்தியத் தலைமை நீதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் அல்லது மக்களவையில் எதிர்க்கட்சிகளில் அதிக எம்பிக்களைக் கொண்ட கட்சித் தலைவர் குழு தெரிவு செய்யும்). இனி நீதிபதிகளை நீதிபதிகளே நியமனம் செய்யும் முறை இருக்கப்போவதில்லை, ஆனால் அதற்குப் பதிலாக நிர்வாகம்–பாராளுமன்றம்–அரசியல்வாதிகளிலிருந்து நீதித்துறைக்கு வெளியே இருக்கும் நபர்களும் ஈடுபட உள்ளனர்.

இயற்கையாகவே இந்த சம்பவம் தொடர் விளைவுகளை ஏற்படுத்தியது. நீதித்துறையின்


தொடர்ச்சி 2ம் பக்கம்


## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஜம்மு–காஷ்மீர் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்!

### எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் மத்தியக் கமிட்டி பொதுமக்களுக்கு வேண்டுகோள்

ஜம்மு–காஷ்மீர் மாநிலம் முழுவதும் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அம்மாநில மக்களின் வாழ்க்கையில் மிகப்பெரும் நாசத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அன்றாடம் மக்கள் அவதியுற்றுவருவதை பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் நாம் கண்டுவருகின்றோம். நாடு சுதந்திரமடைந்ததற்குப் பின்பு இப்படிப்பட்டதொரு நாசகரமான இயற்கைச் சீற்றத்தை ஜம்மு–காஷ்மீர் மக்கள் சந்தித்ததில்லை. இந்த வெள்ளப் பாதிப்பினால் பல நூற்றுக்கணக்கான உயிர்கள் மடிந்திருக்கின்றன. பல ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் உடமைகளையும் உறவுகளையும் இழந்து தவிக்கிறார்கள். மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற உடைமை இழப்பும் துன்பதுயரங்களும் கணக்கிலடங்காது. மேற்கொள்ளப் பட்டுவரும் மீட்பு நடவடிக்கை மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அதிருப்தியும் உள்ளக்குமுறலும் மக்களிடம் நிலவுகின்றன.

சக மனிதர்களின் வாழ்க்கையில் எதிர்பாராமல் நேரும் இக்கட்டான துன்பம் மிகுந்த தருணங்களில் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது மனித நேயம் கொண்ட அனைவரின் பொறுப்பும் கடமையும் ஆகும். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி ஜம்மு–காஷ்மீர் மக்களின் துயர்துடைக்க உதவிக்கரம் நீட்டுவதற்கு முடிவுசெய்திருக்கிறது.

அனைத்து மாநிலங்களிலும் அனைத்துப்பகுதி மக்களிடமிருந்தும் நிதி மற்றும் மருந்துப் பொருட்களைத் திரட்டி பாதிப்பிற்குள்ளான ஜம்மு–காஷ்மீர் மக்களுக்கு நேரடியாக உதவிகளைக் கொண்டு சேர்க்க உரிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். ஜம்மு–காஷ்மீர் மக்களின் துயரங்களை இத்தருணத்தில் சரியாக உணர்ந்து அனைத்து வகையிலும் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வருமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

**பிரவாஸ் கோஷ்**

பொதுச் செயலாளர், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

Cheques/DDs Payable to : Socialist Unity Centre of India (Communist)
UCO Bank AC No : 09520110012161
IFS Code : UBCA 0000952 BEHALA BRANCH, KOLKATA

# கொல்கத்தாவில் மாணவர் பேரணி




அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO)வின் மேற்கு வங்க மாநில கமிட்டியின் சார்பாக செப்டம்பர் 10, 2014 அன்று 25000 மாணவர்கள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது. மாணவர்களை பாதிக்கும் மிக மோசமான கல்விக் கொள்கைகளான கல்விக் கட்டண உயர்வு, தனியார்மயம், கல்வி காவிமயம் ஆக்கப்படுதல் குதிராம் போஸ் போன்ற சமரசமற்ற புரட்சியாளர்கள் தீவிரவாதிகளாக சித்தரிக்கப்படுதல் ஆகியவற்றுக்கு எதிராகவும் பெண்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துதல், 8ம் வகுப்பு வரை பாஸ்–பெயில் முறையை மீண்டும் அறிமுகப்படுத்தல் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக கொல்கத்தாவிலுள்ள கல்லூரி சதுக்கத்தில் துவங்கி எஸ்பிளனேட் வரை இப்பேரணி நடைபெற்றது.

## உயர்மட்ட நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனம்

# முதலாளித்துவ அரசின் அனைத்து அங்கங்களிலும் ஊழல் பீடித்துள்ளது, நீதித்துறை விதிவிலக்கல்ல

1ம் பக்கத் தொடர்ச்சி

சுதந்திரத்தை நிர்வாகமும்–மக்களவையும் கட்டுப் படுத்துகிறதா? இது நியாயம்தானா? இந்தியாவில் இந்த விவாதம் ஒன்றும் புதிதல்ல. இது இந்தப் பிரச் சினையை மீண்டும் வெளியே கொண்டு வந்துள்ளது.

இந்தப் பிரச்சினையில் கேள்விக்குள்ளாக்கப் பட்ட கோபால் சுப்பிரமணியன், ஊடகத்திற்கு அளித்த பேட்டியில், இதில் அரசாங்கத்தின் தலையீடு அதாவது நிர்வாகம்–மக்களவையின் தலையீடு காரணமாக இருந்திருக்கும் என்று கவலை தெரிவித் துள்ளார். சொராபுதின் மற்றும் இஷ்ரத் ஜஹான் போலி என்கவுண்டர் வழக்கில் நீதிமன்றத்திற்கு ஆலோசகராக தான் பணியாற்றியது தான் உச்ச நீதிமன்ற நீதிபதியாக வருவதற்குக் குறுக்கே வந்திருக் கலாம் என்று தெரிவித்தார். குஜராத்தில் நடை பெற்ற இந்த சொராபுதீன் வழக்கில்தான் அன்றைய குஜராத் முதல்வரும் இன்றைய பிரதமருமான நரேந்திரமோடியின் நெருங்கிய நம்பிக்கைக் குரியவரானவரும் தற்போதைய பாஜக தலைவரு மான அமித் ஷா குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் என்பதை நினைவுபடுத்திக்கொள்ளவும். இந்த வழக்கில் சிபிஐ யின் சந்தேகப்பார்வையில் மோடியும் இருந்தார். அதை விட்டுவிடுவோம், தற்போது கோபால் சுப்பிர மணியன் போட்டியில் தொடர்ந்து இருக்க மறுத்து விட்டார்.

கொலிஜியம் அமைப்பு குறித்து கருத்து வேறு பாடு எழுந்துள்ளது. முந்தைய இந்தியத் தலைமை நீதிபதி ஆர்எம் லோதா, சில முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதிகள், ஒரு பிரிவு நீதிபதிகள், அதோடு நமது நாட்டின் சில அறிவார்ந்த மக்கள் ஆகியோர் இந்த கொலிஜியம் அமைப்பிற்கு ஆதரவு தெரி வித்துள்ளதோடு, அரசாங்கத்தின் இந்த அவசரகதி யிலான நடவடிக்கைகள் நீதித்துறையின் சுதந்திரத்தில் தலையிடுவதாக உள்ளது என்றும் குற்றம் சாட்டி யுள்ளனர். அதே வேளையில் பாராளுமன்றத்தில் உள்ள கிட்டத்தட்ட அனைத்து அரசியல் கட்சிகளும், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி மார்க்கண்டே கட்ஜூ, உச்சநீதிமன்ற முன்னாள் கொலிஜியம் உறுப்பினர் நீதிபதி ருமா பால் போன்ற நீதித் துறையின் ஒரு பிரிவினரும் இந்த கொலிஜியம் அமைப்பில் ஓட்டை இருப்பதாகவும் அது தெளிவாக பரிசீலித்து வடிகட்டி தேர்ந்தெடுப்பதில் தோல்வி கண்டுவிட்டது என்றும் கூறுகின்றனர். ஆதலால் இது ஊழல் நீதிபதிகள் அல்லது திறமையற்ற நீதிபதி களை நியமனம் செய்வதற்கும் வாய்ப்பளித்து விட்டது, அதோடு கீழ் நீதிமன்றங்களின் பரிந்துரை களை நிராகரித்ததற்கான காரணங்கள் கூறாமல் இருப்பது போன்று, அதன் செயல்பாடுகளுக்கு விளக்கமளிப்பதும் இல்லை. இந்த அமைப்பு அரசியல் மற்றும் நிர்வாக அழுத்தங்களை மீறி திறன் படவும் பரிசுத்தமாகவும் செயல்படமுடியவில்லை என்று நீதிபதி கட்ஜூ மற்றும் நீதிபதி பால் ஆகியோர் கூறுகின்றனர்.

இந்தப் பிரச்சினை பாராளுமன்றத்திற்கு உள்ளேயோ, அல்லது தலைமைச் செயலகம் அல்லது நீதிமன்றத்திற்கு உள்ளேயோ முடிந்துவிடவில்லை. இது வரவிருக்கும் வேறொரு ஆழமான ஒன்றைக் குறிக்கிறது. எனவே இது பற்றி ஆழமான ஆய்வு தேவைப்படுகிறது. நாடு முழுவதிலுமிருந்தும் சமூகத்தி லிருந்தும் கடுமையான விமர்சனம் எழுந்ததை அடுத்து 'நீதித்துறை மீது அதிக மரியாதை வைத்திருப்ப தாக அரசாங்கம் மீண்டும் மீண்டும் தெரிவித்தது. ஆனால் ஒரு கேள்வி அப்படியேதான் இருக்கிறது; நீதித்துறையின் மீதான தனது நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஏன் அரசாங்கம் இவ்வளவு முனைப்புக் காட்டுகிறது? நீதித்துறையை ஊழலி லிருந்து விடுவித்து நீதிபதிகளின் நியமனத்தில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவருவதற் காக என்று அறிவிக்கப்பட்டுள்ள திசையை நோக்கித் தான் இது செல்கிறதா? எல்லாவற்றிற்கும் மேலாக, கொலிஜியம் அமைப்பை, விமர்சிப்பவர்களும் ஆதரிப்பவர்களும், இருவருமே சில முக்கியமான பிரச்சினைகளை விட்டுவிடவில்லையா?

பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொள் வதற்கு, அது நடைபெறும் சமயத்தில் உள்ள சமூக–அரசியல் சூழ்நிலைமைகளையும் அதோடு மிகைப் படுத்தப்படும் அம்சங்கள் போக்குகளையும் வைத்துப் பார்க்கவேண்டும். எனவே முதலில் இதுபற்றி சுருக்கமாக விவாதிக்க வேண்டியது அவசியம், அதைத் தொடர்ந்து இந்த விஷயத்திற்கும் அதற்கும் இடையிலான தொடர்பைப் பார்க்கவேண்டும்.

### கடந்த காலத்தின் முதலாளித்துவமும் 'அதிகாரப் பகிர்வும்'

முதலில், இந்த நீதிபதிகள் நியமனம் நடை பெறக்கூடிய முறையும் இந்த அனுபவமும் ஒரு முதலாளித்துவ குணம் கொண்ட அரசமைப்பில் நடக்கிறது என்பது உண்மை இல்லையா? அதோடு அரசு என்பது ஒரு அமைப்பை, சட்டம் ஒழுங்கு குறித்த கருத்தை, கோட்பாடுகளை, அடிப்படை உரிமைகளை குறிக்கிறது. இவற்றைப் பாதுகாப்பதற் காக இந்த அடிக்கட்டுமானத்தின் மீது நீதி, ராணுவம்–போலீஸ்–நிர்வாகம் மற்றும் சட்டமியற்றும் மன்றங்கள் என்ற மூன்று தூண்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை இறுதியாக ஆட்சியாளர்களின் நலன்களுக்கு, ஆளும் வர்க்கத்திற்கு, அதாவது ஒரு முதலாளித்துவ அரசில் ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு சேவை செய்கின்றன. முதலாளித்துவ அரசு உதித்தபோது அது ஜனநாயக, பூர்ஷ்வா ஜனநாயகக் கருத்துக்களை வளர்த்தது, ஜனநாயக நிறுவன அமைப்புகளை உருவாக்கியது, ஜனநாயக மதிப்புகளையும் நியதி களையும் போற்றியது, அதற்கு ஏற்ற வகையில் ஒப்பீட்டளவிலான சுதந்திரத்தோடு அதன் மூன்று நிரந்தர அங்கங்களான நிர்வாகம், சட்டமியற்றும் மன்றம், மற்றும் நீதித்துறை (Executive, Legislature and Judiciary) அமைப்புகளை உருவாக்கியது. இந்த மூன்று அங்கங்களுக்கும் அவற்றிற்கே உரிய தனித்தன்மை, தனித்த அதிகாரங்கள், உறுதியான பொறுப்புகளும் கடமைகளும் வழங்கப்பட்டன. பூர்ஷ்வா ஜனநாயகத்தின் ஸ்தாபக தந்தைகள் அழைப்பது போல் 'அதிகாரப் பகிர்வு' என்ற கோட்பாட்டின்படி பணியாற்றின. வரலாற்றுப் பக்கங்கள் இதை சந்தேகத்திற்கு இடமின்றி பதிவு செய்துள்ளன.

அதிகாரம் என்பது ஒரே இடத்தில் குவிந்து விடக்கூடாது, அந்த அங்கங்கள் பணியாற்றும்போது ஒன்றன் பணியில் மற்றது தலையீடு இல்லாமலும் குறுக்கீடு இல்லாமலும் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த அதிகாரப் பகிர்வு கொண்டுவரப்பட்டது. பாராளுமன்றம் / சட்டமன்றம் இயற்றக்கூடிய சட்டங்கள், நிர்வாகத்தால் கொண்டுவரப்படக் கூடிய உத்தரவுகள் அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி இருக்கிறதா என்பதை சரி பார்த்து அதைப் பாதுகாக்கும் அதிகாரம் நீதித்துறை யிடம் வழங்கப்பட்டது, இவ்வாறு சரிபார்க்கும் முறைக்கு நீதித்துறை சீராய்வு என்று பெயர்.

ஒரு சமூக சக்தியாக பூர்ஷ்வாக்கள் உருவெடுத்த நேரத்தில் பூர்ஷ்வா ஜனநாயகம் உருவெடுத்த சமயத்தில் நீதியின் இறுதி முடிவாக, மக்களின் கருத்துக்கே உச்சபட்ச முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று அறுதியிட்டு கூறப்பட்டது. இந்த மூன்று அங்கங்களில், சட்டமியற்றும் மன்றங்கள் தான் பாராளுமன்ற ஜனநாயகத்தின் தேர்தல்கள் மூலம் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றன. எனவே ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட எவரும் மக்கள் கருத்தை, அது வலுவாக, ஒன்றுபட்டு, அச்சமின்றி இருக்கையில், இறுதி வெற்றி என்பதையும் நம்பியே ஆகவேண்டும். எனவேதான், பொதுமக்கள் தரப்பில் விழிப்புணர்வுள்ள தொடர்ச்சி யான கண்காணிப்புதான் ஜனநாயகத்திற்கான சிறந்த பாதுகாப்பு என்று கருதப்பட்டது. அதே நேரத்தில் பூர்ஷ்வா ஜனநாயகத்தின் இந்த மூன்று அங்கங் களுள் எந்த ஒன்றிலும் அதீத அதிகாரம் குவிந்து விடாமலோ அல்லது ஒன்றன் அதிகாரத்தை மற்றொன்று பறித்துவிடாமலோ இருப்பதற்காக 'பரிசோதித்து சரிபார்க்கும் அமைப்பு' உருவாக்கப் பட்டது.

### இன்றைய முதலாளித்துவமும் அதன் ஓட்டுமொத்த நெருக்கடியும் எங்கும் பரவும்

ஆனால் அந்தக் காலம் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக போராடி சமூகத்தின் முற்போக்கு சக்தியாக முதலாளித்துவம் விளங்கிய காலமாகும். ஆனால் அதே முதலாளித்துவம் சுரண்டலின் அடிப்படையில் ஏகபோகத்திற்கு சென்றது, அதனைத் தொடர்ந்து ஏகாதிபத்தியத்திற்கு இட்டுச்சென்றது, இன்று அது முற்றிலும் கிழடுதட்டி முற்றிலும் சீரழிந்துபோன உலக அமைப்பாக மாறிவிட்டது. இன்று அனைத்து முதலாளித்துவ நாட்டின் முதலாளித்துவ–ஏகாதி பத்திய ஆட்சியாளர்களும் தங்களது இந்த ஓட்டு மொத்த நெருக்கடியில் இருந்து எப்படியாவது வெளியே வருவதற்கான வழியைத் தேடிக்கொண்டே இருக்கின்றனர், ஆனாலும் அது பயனை அளிக்க வில்லை. அவர்கள் ஏராளமான முயற்சிகள் மேற் கொண்டும் முன்னேற்றம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

மாறாக ஓட்டுமொத்த நெருக்கடி மேலும் உக்கிர மடைந்து, அனைத்து முதலாளித்துவ நாடுகளிலும் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் என வாழ்க் கையின் அனைத்து களங்களிலும் சீரழிவும் கேடும் தலைவிரித்தாடுகிறது. பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூகத்திலும் நிலையற்றதன்மையும் பாது காப்பற்ற தன்மையும் நிலவுகிறது. முழுமையான ஒழுக்கநெறி சீரழிவு, விழுமியங்கள் இல்லாமை, ஊழல், முறைகேடு, இன்னும் இதுபோன்ற ஒரு காலத்தில் நாகரீக உலகம் வெறுத்து ஒதுக்கிய, மோசமான பழக்கவழக்கங்கள் இன்று அன்றாட நிகழ்வுகள் ஆகிவிட்டன. நெருக்கடியின் ஆழம் மேலும் மேலும் அதிகரிக்க, சீரழிவின் ஆழமும் அதிகரிக்கிறது, ஆளும் முதலாளித்துவ வர்க்கமும் எப்படியாவது தனது ஆட்சியை நீட்டிக்கவும், எப்படி யாவது அதிகபட்ச லாபத்தை, அழிந்துவரும் அமைப் பிலிருந்து அதிகபட்ச லாபத்தை, அறுவடை செய்ய வேண்டும் என்று மேலும் வெறிபிடித்துத் திரிகிறது. அதிகாரத்தை நிலைநிறுத்தவும் குவிப்பதற்கும் அவர்கள் காட்டும் வெறியில் அவர்களது முனைப்பு பிரதிபலிக்கிறது.

எனவேதான் ஜனநாயகம் என்ற முகமூடியை வைத்துக்கொண்டே இருகட்சி அல்லது பல கட்சி பாராளுமன்ற அமைப்பை வைத்துக் கொண்டே எப்படியாவது நிர்வாக பாசிசத்தை உருவாக்குவதற்கு பித்துபிடித்து அலைகின்றனர். இரண்டு உலகப் போர்கள் முடிந்த பின்பு இந்த போக்குதான் அனைத்து முதலாளித்துவ நாடுகளிலும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

முதலாளித்துவத்தின் இந்த கிழடுதட்டிப் போன கட்டத்தில்தான் இந்திய முதலாளித்துவமும் அதன் அரசும் உருவாகி வளர்ந்து நிலைபெற்றது. எனவேதான் அது பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பின்பற்றினாலும் சீரழிந்துபோன முதலாளித் துவத்தின் ஆயிரத்தொரு தீய குணங்களையும் தன்னகத்தே கொண்டுவந்தது. அதோடு நெருக்கடி அதிகரித்து உக்கிரமடைய, இந்த தீய குணங்களும் நோய்களும் பல்கிப் பெருகி எல்லா இடங்களிலும் வெளிப்படுகிறது.

தொழில் தேக்க நிலை, வளர்ச்சி பெருகாமை, கடுமையான பணவீக்கம், பெருகிவரும் வேலை யில்லாத் திண்டாட்டம் இன்னும் இது போன்ற பல நெருக்கடிகள் பொருளாதாரத்தில் தென்படு கின்றன. ஆளும் முதலாளித்துவவாதிகளுக்கு பாராளுமன்ற அரசியல் கட்சிகளும் அதன் தலைவர் களும் அடிபணிந்து தாராளமாக சேவை செய்வதும், அரசியல்வாதிகளிடம் உள்ள பதவி வெறி, வெட்கக் கேடான பேராசை மற்றும் ஊழல், பெருவாரியான கிரிமினல்மயம், கொஞ்சம் கூட விழுமியங்கள் அற்ற சுயநல அணுகுமுறை, இன்னும் இதுபோன்ற மோசமான வியாதிகளால் பாராளுமன்ற அரசியல் களம் கெட்டு அழுகிவருகிறது. பாராளுமன்றத் தேர் தல்கள் பணம்–ஊடகம்–மாஃபியா கூட்டணியால் இயக்கப்படுகிறது. சமூகத்திற்கு பதில்கூறும் கடமை, சமூகப் பொறுப்புணர்வு போன்றவை எல்லாம் அரிதான ஒன்றாகிவிட்டது. தடுக்கப்படாத வேலை யில்லாத் திண்டாட்டம், கடுமையான வறுமை, தாங்கமுடியா விலைவாசி உயர்வு, நிலையில்லா–பாதுகாப்பில்லா வாழ்க்கை, பெண்கள் மற்றும் குறிப்பாகக் குழந்தைகள் மீதான பெருகிவரும் கடும் தாக்குதல்கள், எல்லாவிதமான பிரிவுவாத எண்ணங்களைப் பரப்புதல் அதோடு அச்ச உணர்வு போன்றவற்றால் மக்களுடைய வாழ்க்கை குரூரமான தாக்குதலுக்கு ஆளாகியுள்ளது. முதலாளித்துவம் காலாவதியானதன் தொடர்விளைவாக வாழ்க் கையின் கிட்டத்தட்ட அனைத்துக் களங்களிலும் குற்றம் பெருவாரியாக அதிகரித்துள்ளது.

இயற்கையாகவே இந்த ஓட்டுமொத்த சீரழிவும் நெருக்கடியும் அரசின் அனைத்து அங்கங்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# பாசிசமும் இடதுசாரி ஜனநாயக இயக்கத்தில் ஒழுக்கநெறிகள், நீதிநெறிகளின் நெருக்கடியும்

**– சிப்தாஸ் கோஷ்**



"... பாசிசம் என்றால் என்ன என்பதை நாம் முழுமையாக, சரிவர புரிந்து கொள்ள வேண்டும். பாசிசம் பற்றிய நமது கட்சியின் பகுப்பாய்வின் முக்கியமான அம்சம் ஒன்றை நாம் **1949** முதலாகவே திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டி வந்துள்ளோம். கடுமையான ஒடுக்குமுறை தன்மையுடைய நிர்வாகம், எல்லா விதமான சர்வாதிகாரம் ஆகியவை பாசிசம் என்று சிலர் கருதுகிறார்கள். சர்வாதிகாரம் என்பது ராணுவ ஆட்சியின் சர்வாதிகாரமாகக்கூட இருக்கலாம் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். ஒரு ராணுவக்கலகம் (Military coup) மூலமாகக்கூட இது அரங்கேறலாம். மக்கள்விரோத நிர்வாக அமைப்புகள் அனைத்திலும் ஒடுக்குமுறைகளும் சித்திரவதைகளும் உள்ளன. ஏகாதிபத்தியங்கள்கூட காலனி நாடுகளில் சித்திரவதைகளும் ஒடுக்குமுறைகளும் கையாள்கின்றன. ஆனால், பாசிசம் என்பது இவையெல்லாவற்றைக் காட்டிலும் மிகவும் நாசகரமானது. வெறும் அடக்குமுறை மட்டுமே ஒரு நாட்டில் பெருந் தீங்குகளை விளைவித்துவிடாது. பாசிசம் என்பது அனைத்து வகைகளிலுமான எதிர்ப்புரட்சி எழுச்சியாகும். ஒருபுறத்தில் அது, மக்களின் பகுத்தறியும் சிந்தனைப்போக்கை சிதைத்து, அவர்களை தன்மையப்பட்டவர்களாக்கி, கற்றல், அறிவு, கல்வி ஆகியவற்றை தொழில்நுட்பத்தை நோக்கியதாக சீரழிக்கிறது. அதாவது, எல்லாவிதமான மானுட விழுமியங்களையும் முற்றிலும் கைவிட்டுவிட்ட மக்கள் பற்றியும் சமூகத்தின்பாலும் எவ்வித பொறுப்பும் அக்கறையுமற்ற, உத்தியோகமும் கூலி அடிமைத்தனமும் மட்டுமே வாழ்க்கையில் எல்லாமும் என்று கருதுகின்ற, காசுக்காக எதை வேண்டுமானாலும் செய்யத்துணிகின்ற தொழில்நுட்ப வல்லுநர்களை நாட்டில் அது உருவாக்குகிறது. இவற்றை நோக்கியே அறிவியலையும் கற்றலையும் திசைதிருப்பி விடுகின்றனர். மறுபுறத்தில், பாசிசமானது எல்லாவிதமான ஆன்மீகவாதம் (Spiritualism) காலாவதியாகிப்போன மூடப் பழக்கவழக்கங்கள், பகுத்தறிவுக்குட்படாத மனோபாவம், குருட்டுத்தனம் ஆகியவற்றை செழிக்கச் செய்கிறது. ஆகவே, பாசிசம் என்பது ஆன்மீகவாதம், பகுத்தறிவுக்குட்படாத மனோபாவம், பழங்கால காலாவதியாகிப்போன பழக்கவழக்கங்களின் பால்பற்று ஆகியவை அறிவியலின் தொழில் நுட்ப அம்சங்களோடு சேர்ந்த விநோதமான கலவையாகும்.

ஒரு நாட்டில் இத்தகைய கலவை ஏற்படும் போது அந்நாட்டின் ஒட்டுமொத்த பகுத்தறியும் திறனும் மடிந்துவிடுகிறது. எனவே, இடதுசாரி இயக்கத்தின் இன்றைய நிலையைப்பற்றி பேசும் போது நான் ஒரு எச்சரிக்கை விடுத்தேன். ... அரசியல் விவாதங்களுக்கு இடமளிக்காமல் தங்கள் பலத்தை பெருக்கிக்கொள்வதற்காக புஜபலத்தை உபயோகிப்பதில் ஆர்வம் காட்டுகின்ற இடதுசாரிகள் தங்களது பலம் மற்றும் எண்ணிக்கை அளவு ஆகியவற்றின் காரணமாக தற்காலிக ஆதாயம் பெறக்கூடும். தங்கள் கருத்துக்களைக் கூறுவதற்கு அவர்கள் யாரையும் அனுமதிப்பதில்லை; சரி, தவறை சீர்தூக்கி பார்ப்பதற்கு அக்கறை காட்டுவதில்லை: இத்தகைய சீர்தூக்கி ஆராயும் தங்களுடைய சொந்த அறிவை அவர்களது தொண்டர்கள் இழப்பதோடு அடுத்தவர்களிடத்திலும் இத்திறனை அழித்துவிடுகின்றனர்.

இதனால் விளையும் பேராபத்து என்ன என்று அவர்கள் அறிவார்களா? இதை நம்புவதற்கு கடினமாக இருக்கலாம். ஆனால் இதுவே உண்மை. பாசிசத்துக்கு எதிராகவும் கம்யூனிசம், இடதுசாரிவாதம், போராட்டம், புரட்சி என்றெல்லாமும் பேசுபவர்கள், அடக்குமுறையை எதிர்த்து போராடுபவர்கள் – இவர்களே தங்களது சொந்த நடத்தை, நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் பகுத்தறிவுக்கு மாறான மனோபாவத்தை வளர்ப்பதற்கு உதவுகிறார்கள். இதுபோன்ற போக்குகள் வேறு வழியின்றி இடதுசாரிவாதத்திற்கு சவக்குழி தோண்டி பாசிசம் வளர வழிவகுக்கும்.

ஏனெனில், ஒரு நாட்டில் நல்லது கெட்டதை சீர்தூக்கிப்பார்க்கும் திறன் மழுங்கும்போது பிற்போக்கு சிந்தனைகள் சமுதாயத்தில் ஊடுருவுவதற்கு வழியேற்படுகிறது. தேசிய வெறிவாதம் என்ற நஞ்சை மனிதனுக்கு ஒருபுறம் ஊட்டுவதோடு மறுபுறத்தில் காலாவதியாகிவிட்ட பாரம்பரிய வீண் பெருமைகளை பேசிக்கொண்டு அதே நேரத்தில், சோசலிசம், புரட்சி, முன்னேற்றம் போன்ற கோஷங்களை எழுப்பிக்கொண்டு ஒரு நாட்டில் இவை மூன்றையும் ஒன்று சேர்க்க முடிந்தால் அந்நாட்டில் பாசிசம் தலைதூக்கி எழுவதற்கு தயாராகிறது. அறிவுஜீவிப்பிரிவினரை தவறாக வழிநடத்தி இம்மூன்று விஷயங்களையும் திறம்பட ஒன்றிணைப்பதில் ஆளும் பூர்ஷ்வா வர்க்கம் வெற்றிகண்டபிறகு தான் பகுத்தறிவு, தர்க்கம் ஆகியவற்றுக்கு உட்பட்ட வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவதற்கான மனோபாவம் சமுதாயத்தில் இல்லாமற்போகிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதுவே, பாசிசம் வளர்வதற்கான பொன்னான வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

அதனால்தான் இடதுசாரி சக்திகளுக்கு எச்சரிக்கை விடுத்து நான் கூறினேன்: பகுத்தறிவுக்கு எட்டாத இத்தகைய மனோபாவத்தை நாட்டில் வளர்ப்பதற்கு காங்கிரஸும் அதைப் போன்று ஒருபுறத்தில் தேசிய வெறிவாதம் என்ற விஷத்தைக் கொண்டு மறுபுறத்தில் மனிதனுக்கு வெறியூட்டி, ஆளும் வர்க்க கட்சிகளும் தங்களாலான அனைத்தையும் செய்யும். இத்தகைய மனோபாவம் வளர்வதையே அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால், தங்களுடைய குறுகிய கட்சி நலனுக்காக இடதுசாரிகள்கூட ஏன் இத்தகைய மனோவாவத்தை வளர்க்கும் செயல்களில் ஈடுபடுகிறார்கள்? அவ்வாறு செய்வதால் அப்போதைக்கு ஏதோ சில ஆதாயம் கிடைக்கும். ஆனால் காலப்போக்கில் இது அவர்கள் தங்களுக்கு தாங்களே சவக்குழி தோண்டிக் கொள்வதாக அமையும்.

எனவே, இக்காரணங்களுக்காகவே பகுத்தறிவுக்கு உட்படாத மனோபாவத்திற்கு எதிரான போராட்டம் அவசியமாகிறது. அறிவு, அறிவியல், விஞ்ஞானம் ஆகியவற்றின் வளர்ச்சி, கலந்துரையாடல், விவாதம், பிரதிவாதம், கருத்துக்கள் மீதான பரஸ்பர விமர்சனம் ஆகியவற்றுக்கு உகந்ததான சூழ்நிலை மிகமிக அவசியமாகும். இத்தகைய சூழ்நிலை நிலவும்போது மட்டுமே சுரண்டும் வர்க்கத்துக்கு சேவைசெய்யும் கட்சிகள் மக்கள் மத்தியில் ஊடுருவுவதற்கு எளிதாக இருக்காது.

நாட்டில் உணவு நெருக்கடி கடுமையாகிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கிறது. தொழில்மயம் நடக்கவில்லை, வேலைவாய்ப்பின்மை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மின் பற்றாக்குறை நிலவுகிறது என்பதெல்லாம் உண்மைதான். இவற்றையெல்லாம் கண்டு நாம் அனைவரும் கடுங்கோபம் கொள்கிறோம். ஆனால், இவற்றையெல்லாம்விட கவலைதருவதும் அபாயகரமானதும் என்னவென்றால் ஒழுக்கம், நீதிநெறி, கலாச்சாரம் ஆகியவற்றின் படுவேகமான வீழ்ச்சியும் பகுத்தறிவுக்கு விரோதமான சிந்தனைமுறையின் அதிவேகமான அதிகரிப்புமேயாகும்.

இல்லாமையும் அடக்குமுறையும் எவ்வளவுதான் கடுமையாக இருந்தாலும் அதனாலெல்லாம் ஒரு தேசத்தை நசுக்கிவிட முடியாது என்பதை மனதில் கொள்ள வேண்டும். பிரிட்டிஷார் நம்மை கிட்டத்தட்ட **200** ஆண்டுகளுக்குள்ளாக அடக்கிவைத்திருந்தார்கள். ஆனாலும் ஒட்டுமொத்த தேசத்தையும் அவர்களால் அழித்துவிட முடியவில்லை. சிறிய நாடான வியட்நாம் மீது தொடர்ந்து சிறு இடத்தைக்கூட விட்டுவைக்காமல் கண்மண் தெரியாமல் குண்டுமழை பொழிந்து அந்நாட்டு மக்கள் நிலத்துக்கடியில் பதுங்கி வாழவேண்டிய கட்டாயத்திற்கு யுஎஸ் ஆளாக்கிய போதும்கூட ஒட்டுமொத்த வியட்நாம் தேசத்தின் முதுகெலும்பை முறிக்க முடியவில்லை.

நம்நாட்டு ஆட்சியாளர்கள் வெறும் பொருளாதார துன்பங்களை மட்டுமா நமக்குத் தருகிறார்கள்? தங்களுடைய அநியாயமான நடவடிக்கைகளை நியாயப்படுத்தி அவற்றை ஆதரிக்குமாறு அவர்கள் மக்களை கேட்கின்றவிதம்: போலீசார் வெளிப்படையாகவே சட்டத்தை அன்றாடம் மீறுகின்ற விதம்: போலீசின் இத்தகைய நடவடிக்கைக்கு அரசியல் தலைவர்களும் நிர்வாகமும் கண்டும் காணாது இருக்கும் விதம். இளைஞர்கள்கூட நல்லது கெட்டதை சீர்தூக்கி ஆராய விரும்பாத அளவிற்கு பகுத்தறிவுக்கு உட்படாத சிந்தனைப்போக்கு வலுவாகி, பொது இடங்களில்கூட நாகரீகமற்ற முறையில் நடந்துகொள்ளும் விதம்; இவற்றையெல்லாம் கண்டும் மௌனம் காக்கும் வயதில் மூத்தவர்கள்; சமுதாயத்தின் அனைத்து அடுக்குகளிலும் அடுத்தவர் கருத்துக்களுக்கான சகிப்பின்மை – இவையெல்லாம் எதை நிரூபிக்கின்றன? நாம் வெறுமனே பட்டினி கிடப்பதை அல்லது இல்லாமையில் இருப்பதையா இவை நிரூபிக்கின்றன? மாறாக, நமது தார்மீக, ஒழுக்கநெறிகளெனும் முதுகெலும்பு முறிந்துவருவதை இவை உணர்த்தவில்லையா?

நினைவிருக்கட்டும்! உயர்ந்த மனிதப் பண்புகளை ஒரு தேசம் பெற்றிருக்குமானால் பட்டினி கிடந்தால்கூட அத்தேசத்தால் நிமிர்ந்து நிற்க முடியும்; உணவின்றியேகூட போராட்டங்கள் நடத்த முடியும். ஆனால், பாசிசம் வேர்விட்டால் மனிதன் என்று அழைப்பதற்கு தகுதியுடைய மிகச்சிலர் மட்டுமே எஞ்சி நிற்பர். ஏனெனில், மனிதனை உருவாக்கும் போக்கில் பாசிசம் தடங்கல் ஏற்படுத்துகிறது. எந்தவொரு உன்னத தத்துவமாயினும் அதன் நீதிநெறி, கலாச்சார தரத்தில்தான் அதன் சாராம்சம் அடங்கியுள்ளது.

நீதிநெறி, கலாச்சாரத்தரம் உயர்வாக இல்லையெனில், உன்னத அரசியல் சித்தாந்தத்தின் சித்தாந்த உள்ளடக்கம் யதார்த்தத்தில், உயிர்ப்பற்ற வெற்றுக்கூடாக மாறிவிடுகிறது. பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் உயிரற்ற உடல் உபயோகமற்றது. அதை அப்படியே விட்டுவிட்டால் அழுகி நாற்றமெடுக்கத் துவங்குகிறது. இது சமுதாயத்திற்கு தீமை பயக்கிறது. எனவே, ஒருவர் தத்துவத்தைப்பற்றி மிக உயர்வாக பேசுகிறாரா என்பது முக்கியமல்ல. அக்கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும் ஆதரவாளர்களும் தங்களது சொந்த வாழ்விலும் அன்றாட நடவடிக்கைகளிலும் அரசியல் நடத்தையிலும் உயர்ந்த கலாச்சார நீதிநெறித் தரத்தை பிரதிபலிக்கிறார்களா என்பது தான் அவர்களுடைய தத்துவம் உயர்ந்ததா? இல்லையா? என்பதற்கான உண்மையான ஆதாரமாகும்.

எனவே, சிபிஐ(எம்) உண்மையிலேயே ஒரு புரட்சிகர கட்சியாக இருந்திருக்குமானால், அதன் செல்வாக்கு பரவத்துவங்கியபோது முதலாளித்துவம் மட்கத் துவங்கியபோது சமுதாயத்தில் துவங்கிய கலாச்சாரத்தர வீழ்ச்சியும் ஒழுக்கக்கேடுகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனால், அது போன்று எதுவும் நடக்கவில்லை. மாறாக, இதற்கு எதிரான விளைவுகள் ஏற்படுவதையே காண்கிறோம். ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது, (மேற்குவங்கம்) இளைஞர்கள் மத்தியில் சிபிஐ(எம்)யின் செல்வாக்கு வெகுவாக அதிகரித்தபோது தேர்வுகளில் காப்பியடிக்கும் பழக்கம் மாணவர்களிடையே வெகுவாக பரவி முதல்முறையாக பெருமளவு மாணவர்கள் காப்பியடிக்கும் பழக்கத்திற்கு ஆளானதைக் கண்டோம். அக்கட்சியின் தொடர்பில்வரும் இளைஞர்கள் கோஷங்கள் எழுப்புகையில் ஆபாசமான அங்க அசைவுகள் செய்வதையும் நாம் கண்டோம். சிபிஐ(எம்)யின் ஊழியர்கள் எந்த வகையிலாவது விமர்சிக்க முயல்வோரிடம் நடந்துகொள்ளும் விதத்திலிருந்து அவர்கள் மிக கீழ்த்தரமான நீதிநெறி, கலாச்சார தரத்தை பிரதிபலிப்பதை காணமுடிகிறது. பகுத்தறிவுக்கு உட்பட்ட விவாதங்களில் ஈடுபடுவதற்கான எண்ணம் அவர்களிடம் இருப்பதாகவே தெரியவில்லை. அடுத்தவர்களை மனிதப்பிறவிகளாக மதிக்கும் எண்ணம் அவர்களிடத்தில் சற்றும் இல்லை. அவர்களை எப்போது யார் எதிர்த்தாலும் அவ்வாறு எதிர்ப்போரை ஒன்று, அவர்கள் அடித்து நொறுக்குவர் அல்லது பல வகைகளில் அவமானப்படுத்துவர். இவ்வாறிருக்கையில், சமுதாயத்தில் பகுத்தறிவுக்குட்படாத சிந்தனைபோக்கையும் குருட்டுத்தனமான மனோபாவத்தையும் வளர்க்க விரும்புகின்ற குருட்டுத்தனமான வெறியர்கள், பாசிஸ்டுகளுக்கும் புரட்சியாளர்கள் என்றழைக்கப்படும் இவர்களுக்கும் நடத்தையில் என்ன வேறுபாடு இருக்கிறது?

எனவே, எச்சரிக்கை விடுக்கும் விதமாக வெகுஜனங்களின் மனக்குறைகள் கோரிக்கைகளை எழுப்புவதால் மட்டும் புரட்சி நடந்துவிடாது என்று நான்

தொடர்ச்சி 6ம் பக்கம்

### ஆர்எஸ்எஸ், பிஜேபியின் வகுப்புவாதக் கொடுங்கரங்கள் உபி மற்றும் பிற மாநிலங்களுக்கும் நீள்கிறது

# சித்தாந்த ரீதியிலும் ஸ்தாபன ரீதியிலும் இந்துத்துவா தோற்கடிக்கப்படவேண்டும்

அதிகார அரியாசனத்தில் அமர்வதற்கு முன்பு “மகிழ்ச்சியான வருங்காலம்” என்ற தேர்தல் வாக்குறுதியால் மக்களை மயக்கிய தற்போதைய இந்தியப் பிரதமர் மோடி சுதந்திரதின உரையின் போது இனிமேல் 10 ஆண்டுகளுக்கு வகுப்புவாத, ஜாதிய மோதல்களுக்குத் தடைபோடப்படும் என்று அறிவித்தார். முஸ்லீம்களுக்கு எதிரான குஜராத் இனப்படுகொலையின் போது அவர்கள்மீது துளியும் இரக்கம்காட்டாத, முஸ்லீம் சிறுபான்மையினரை “குத்தே கி பச்சா” என்று சொல்வதற்கு எவ்வித மனசாட்சி உறுத்தலும் கொள்ளாத, வாக்காளர்களின் வகுப்புவாத உணர்வுகளைக் கிளர்த்திவிடுவதற்குக் கொஞ்சமும் தயங்காத நரேந்திர மோடி இவ்வாறு கூறியிருப்பது தீடீரென்று ஒரு மதிநுட்பமுள்ள ராஜதந்திரியாக அவர் உருமாறியிருப்பது போலத்தான் நமக்குத் தோன்றுகிறது.

ஆனால் நாட்டில் தொடர்ந்து வெடித்துவரும் வகுப்புவாத மோதல்கள் மற்றும் கலவரங்களைப் பார்க்கிறபோது இதுபோன்ற சகோதரச் சண்டைகளைத் தூண்டிவிடுபவர்கள், திட்டமிடுபவர்கள் என்று குற்றம்சுமத்தப்படுகின்ற சக்திகள் வேறு யாருமல்ல, இந்து வகுப்புவாத சங்கப்பரிவாரங்கள் மற்றும் அதிகாரத்தில் இருக்கின்ற மோடியின் பிஜேபி மற்றும் அதன் தலைமைபீடமான ஆர்எஸ்எஸ் ஆகியவைதான் என்று பார்க்கிறபோது மோடியின் வார்த்தைகள் அனைத்தும் வெறுமனே ஏமாற்று என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிகின்றது.

தேர்தல் நடக்கவிருக்கின்ற மாநிலங்கள் மற்றும் தொகுதிகளில் மட்டும் இந்த வகுப்புவாத வெறியாட்டங்கள் மிக நுட்பமாகக் கிளர்த்திவிடப்படுகின்றன என்பதை நாம் வெளிப்படையாகக் காண முடிகின்றது. நரேந்திரமோடியின் அசாதாரண தேர்தல் வெற்றிக்குப்பிறகு மூன்று மாதங்களாக நாட்டின் பல்வேறு மூலைகளிலும் முஸ்லீம்களுக்கு எதிராக திட்டமிடப்பட்டவகையில் வெறுப்பும் அவதூறுகளும் கிளர்த்திவிடப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாகப் புகைய ஆரம்பித்திருக்கின்றன. எப்போதும் அவர்களுக்குப் பலனளித்துவரும் முஸ்லீம் எதிர்ப்புப் பிரச்சாரத்தின் துணையோடும்; உபி, பிகார் மற்றும் மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், குஜராத், ஹரியானா போன்ற மாநிலங்களில் இந்த உணர்வுநிலையை வெளிப்படையாகக் கிளர்த்திவிட்டு மக்களை எதிர்எதிர் துருவங்களாக மாற்றுவதன் மூலம் தேர்தல் ஆதாயம் அடையமுடியும் என்ற ஊக்கத்துடன் வகுப்புவாதப்பதற்றங்கள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன. இந்த வகுப்புவாத துருவமயப்படுத்தல் பிஜேபிக்கு பலனளிக்கும் என்பதால் இப்படிப்பட்ட மிகக் கீழ்த்தரமான பிரிவினை அரசியலைத் தவிர வேறெதையும் நாம் அதனிடம் எதிர்பார்க்கமுடியாது. நடைபெறும் அனைத்தும் நிகழ்வுகளும் இதனை தெள்ளத்தெளிவாக நிரூபிக்கின்றன.

## செப்டம்பர் 13 இடைத்தேர்தலை ஒட்டி உபி மாநிலத்தில் கலவரங்கள்

வகுப்புவாதத்தின் உறைவிடமாக உபி மாற்றப்பட்டிருக்கின்றது என்றால் அது மிகையில்லை. வகுப்புவாத வன்முறையும் சமூகஇனத்தவர்கள் ஒருவருக்கெதிராக மற்றொருவரை நிறுத்துவதும் மாநிலம் எங்கும் மேலோங்கியிருக்கிறது. பொறிபட்டாலும் வெடிக்கின்ற ஒரு வெடிகுண்டுத் திரியாக மாநிலம் மாறியிருக்கிறது. பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளான மே 16 முதல் இதுவரையில் குறைந்தபட்சம் 24 கலவரங்களை மாநிலம் சந்தித்திருக்கிறது. இடைத்தேர்தல்கள் நடத்த முடிவுசெய்யப்பட்ட பாதிக்கும் மேற்பட்ட உபியின் மேற்குப் பகுதிகளில் இந்தக் கலவரங்கள் நடந்ததை ஏதேச்சையாக நிகழ்ந்தவைகளாக நாம் எடுத்துக் கொண்டுவிட முடியாது. பிஜேபியின் எம்எல்ஏக்கள், எம்பிக்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்ட பிறகு காலியாக இருந்த மொத்தம் 12 தொகுதிகளில் ஆறு தொகுதிகளில் கடந்த இரண்டரை மாதங்களாக வகுப்புவாத மோதல்கள் நடைபெற்று வருகின்றன. சட்டமன்றப் பாராளுமன்றத் தொகுதிகள் உள்ளடங்கிய இந்த ஆறு தொகுதிகளில் நான்கு தொகுதிகளில் லோக்சபா தேர்தல் முடிவுகள் உபியின் பிற பகுதிகளோடு ஒப்பிடும்போது பிஜேபிக்கு சாதகமாக இல்லை.

வகுப்புவாத விஷமத்தனங்களைப் இவர்கள் பரப்புகின்ற முறை மிகவும் நன்கு திட்டமிடப்பட்டசதிபோன்றது. ஏராளமான சங்கப்பரிவார அமைப்புகளும் வெளிப்டையாகத் தெரியாத பின்நிலை அமைப்புகளும் அவ்வப்போது நிகழ்கின்ற பகுதி சார்ந்த சிறு சிறு தகராறுகளை வேண்டுமென்றே பூதாகரமாக ஊதி கொதிப்பேற்றி, முஸ்லீம் மக்கள் மீது சந்தேகம் எழும்படியாக அவற்றைச் சித்தரித்து வதந்திகளைப்பரப்பி, ஒவ்வொரு முறையும் பழைய விஷயங்களை திரும்ப நினைவூட்டி உரமேற்றி வருவார்கள்.

இவ்வாறு திட்டமிட்டுத் தயாரிக்கப்படும் வெடித்திரிகளும் கூட நன்கு அறியப்பட்டவைகளே: கோயில்கள் மற்றும் சுடுகாட்டுக்கு இடம் ஒதுக்குதல், வழிபாட்டுத் தளங்களுக்கு அருகில் ஒலிபெருக்கியை அமைத்தல், ஊர்வலத்தின்போது பட்டாசுகளை வெடித்தல், முஸ்லீம் வாலிபர்கள் அப்பாவி இந்துப் பெண்களை பாலியல்ரீதியாக கொடுமைசெய்வதாக குற்றம் சுமத்தி அவர்களுக்கு எதிராகச் செய்யப்படும் ‘லவ் ஜிகாத்’ என்ற பிரச்சாரம், சில சமயங்களில் வலுக்கட்டாயமாக மதமாற்றம் செய்ததாக எழும் சர்ச்சைகள் அல்லது பசுக்களை வெட்டியதாக எழுப்பப்படும் வதந்திகள் மற்றும் இன்னபிற யாவும் இதில் அடங்கும். இவை போதாதென்று எந்தவொரு சிறு மோதலையும் சர்ச்சையையும் வகுப்புவாத பதற்றத்தின் உச்சநிலைக்குக் கொண்டு செல்ல சங்கப்பரிவாரத்தின் தலைவர்கள் காரணங்களை எப்போதும் தேடிக்கொண்டிருப்பது போன்று தெரிகிறது. முதலில் வாய்க்கு அவலாக விஷயங்கள் கொட்டப்படுகின்றன. பின்பு பொய்களும் மிகையாகத் திரிக்கப்பட்ட தகவல்களும் மீண்டும் கிளர்த்திவிடப்பட்டு எரியும் நெருப்பில் எண்ணெய் வார்க்கப்படுகிறது. பின்பு வகுப்புவாதப் பதற்றம் பற்றிக் கொள்கிறது. பொய்யும் புரட்டும் மக்களைக் கவ்விப்பிடித்துக் கொள்கிறது. அதை விட்டு விலகிட முடியாமல் வெறியுணர்விற்கு பலர் ஆட்பட்டு, யதார்த்தத்திலிருந்து விலகி, ஒரு நிழலைக் கண்டால்கூட அதைநோக்கிப் பாயத் தயாராகிறார்கள்.

மோடி அரசாங்கம் பதவியேற்ற இரண்டு மாதங்களாக உத்திரபிரதேசம் கட்டுக்கடங்காத குற்றச் சம்பவங்களையும் சீர்குலைவையும் சந்தித்துவருகிறது. வகுப்புவாதப்பதற்றம் நிறைந்த 100க்கும் மேற்பட்ட சம்பவங்கள் இதுவரையில் நடந்திருக்கின்றன. முசாபர்நகரில் ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தைத் தொடர்ந்து கொலைவெறித்தனமான மோதல் நடைபெற்றது. பின்பு இது பெண்களைப் பின் தொடர்ந்து செல்லும் “லவ் ஜிகாத்” துக்காக நடைபெற்ற சம்பவமாக திரிக்கப்பட்டது. ஜூன் 5ம் நாள் ஷாம்லியில் மோதல்கள் நடந்தது. முசாபர்நகர் ஜூலை 11 மற்றும் 13 ஆம் தேதிகளில் வகுப்புவாத பதற்றத்தைக் கண்டது. மொராதாபாத்தில் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதியில் தலித் மக்கள் தமது கோயிலில் ஒலிபெருக்கி வைக்குமாறு தூண்டிவிடப்பட்டார்கள்.

சஹாரன்பூரில் குருத்வாராவிற்கு நிலம் ஒதுக்குவது சம்பந்தமாக ஏற்கனவே முடிவுக்கு வந்துவிட்ட ஒரு பழைய சர்ச்சைக்கு மீண்டும் வகுப்புவாதச் சாயம் ஏற்றப்பட்டு அதில்நடந்த வகுப்புவாத வன்முறையில் ஜூலை 26ம் நாள் 3 பேர் கொல்லப்பட்டார்கள். பஹரைச் என்ற இடத்தில் மே 25 அன்றும் கௌதம புத்தர் நகரில் ஜூன் 30 அன்றும் வகுப்புவாத வன்முறை நடைபெற்றது. பஹரைச்சில் உள்ள பல்ஹா பகுதியிலும் கௌதமபுத்தர் நகரிலுள்ள நொய்டாவிலும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது என்பதைக் கவனிக்கவேண்டும். மீரட்டில் மதரஸாவில் இருந்த ஒரு இந்துப் பெண் ஆசிரியர் ஒருவர் காலதாமதமான, உயிருக்கு ஆபத்தான கருக்கலைப்பு சிகிச்சைக்கு சென்ற சம்பவம் பிரச்சினையாக்கப்பட்டு, கூட்டுபாலியல் பலாத்காரமும் வலுக்கட்டாயமான மதமாற்றமும்தான் இதற்குக் காரணம் என்று குற்றம் சுமத்தப்பட்டு, விஷயம் பெரிதாக்கப்பட்டது. ஜாட் சமூகத்தவர்கள் மற்றும் முஸ்லீம்களுக்கிடையே கலவரங்கள் நடந்து ஓய்ந்த பிறகு சீக்கிய சமூகத்தினருக்கும் முஸ்லீம் சமூகத்தினருக்குமிடையே கலவரங்கள் நடந்தன.

மோடி அரசாங்கம் அதன் பொறுப்பு குறித்து உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. சட்டத்தின் ஆட்சியற்ற ஒரு கேட்பாரற்ற நிலைதான் இருந்து வருகிறது. மாநிலம் முழுவதிலும் வகுப்புவாதம் மிகவேகமாகப் பரவிவருகிறது என்பதைப்பற்றி யாரும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. வகுப்புவாத சக்திகளுக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லாத நிலையில் பிரிவினை மற்றும் துவேஷ அரசியல் மூலமாக தங்களது பலத்தை அதிகரித்துக் கொள்ளும்படியான நிலைமையில் வகுப்புவாதம் ஸ்தாபனமயப்படுத்தப்பட்டுவிட்டது போன்றுதான் தோன்றுகிறது. மத்தியிலோ மாநிலத்திலோ அரசாங்கம் இருக்கிறதா இல்லையா? அது மாவட்டங்களிலோ மாநிலத்திலோ அமைதியையும் இணக்கத்தையும் கொண்டுவர விரும்புகிறதா இல்லையா? என்ற உணர்வுத் தாக்கங்கள் அடித்தட்டு மக்களிடையே வளர்ந்து ஒருவித பாதுகாப்பற்ற உணர்வு அவர்களிடம் மேலோங்கியிருக்கிறது. சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கத் தவறியதாக உபி அரசாங்கத்தின் மீதும் சமாஜ்வாதிக் கட்சியின் மீதும் விமர்சனங்களைப் பிஜேபி தொடுக்க, வகுப்புவாதப் படைகளைக் கொண்டு பிஜேபிதான் பிரச்சினைகளைக் கிளறிவிடுகிறது என்று சமாஜ்வாதிகட்சி அதன்மீது எதிர் விமர்சனங்களைத் தொடுத்துக் கொண்டிருக்கிறது. உண்மையில் இந்தத் திட்டமிடப்பட்ட வன்முறை மற்றும் இரத்தக்களரிக்கு மக்கள் பலியாவதைத் தடுத்துநிறுத்தத் தவறி, வேடிக்கைபார்த்த பொறுப்பின்மைக்கு இந்த இரண்டு கட்சிகளுமே குற்றம் சாட்டப்படவேண்டும்.

## பிற மாநிலங்களிலும் தூண்டிவிடப்பட்ட கலவரங்கள்

உபி மட்டுமல்லாது பிற மாநிலங்களிலும் இந்து வகுப்புவாத சக்திகள் தங்களின் கெடுநோக்கத் திட்டங்களுடன் மும்முரமாக செயல்பட்டுவருகிறார்கள். ஹரியானாவில் மேவாட் என்ற இடத்தில் ஒரு முஸ்லீம் டிரைவர் ஓட்டிச்சென்ற டிரக்கில் ஒரு மோட்டார் சைக்கிள் மோதி அதில் இந்து சமூகத்தைச் சேர்ந்த இருவர் இறந்த சம்பவத்தினைத் தொடர்ந்து அங்கும் மோதல்கள் வெடித்தன. மத்தியபிரதேசத்தின் பீதாம்பூரில் சிறுவர்களிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் தகராறு ஏற்பட்டு பின்பு அது வகுப்புவாத மோதலாக வெடித்தது. இம்மாதிரி வகுப்புவாத கலவரங்களை அணிதிரட்டுவதற்கு தற்போது இணைய தளங்கள் ஒரு கருவியாக மாறிவிட்டன.

மகாராஷ்டிரா முழுவதும் புனேவிலிருந்து நாக்பூர் வரை, அவுரங்காபாத்திலிருந்து தூலே வரை மத மற்றும் அரசியல் தலைவர்களை அவமதிக்கும் விதமாக புகைப்படங்கள் சமூக இணையதளங்களில் வெளியிடப்பட்ட பின்பு இரண்டு சமூகத்தினரிடையே வன்முறை வெடித்தது. ஆனால் இப்படிப்பட்ட புகைப்படங்களை பதிவேற்றம் செய்து வெளியிட்டது யார்? என்பது குறித்து வன்முறையில் ஈடுபட்ட யாரும் கவலை கொள்ளவில்லை. குறிப்பாக கடந்த மே மாதம் கடைசி வாரத்தில் புனேயில் நடந்த தாக்குதல்கள் மிகவும் கொடுமையானது. இந்து ராஷ்டிரிய சேனாவின் செயல்வீரர்கள் – கிரிக்கெட் மட்டைகள், இரும்புக் கம்பிகள், கத்திகள் இவற்றோடு வெறித்தனமாக தெருக்களில் இறங்கி 250 பேருந்துகள், இரண்டு மதரஸாக்கள் (குழந்தைகள் படித்துக் கொண்டிருந்தார்கள்), இரண்டு மசூதிகள் மற்றும் கல்லறைகள், ஹோட்டல்கள், பேக்கரிகள், கடைகள் என முஸ்லீம்களுக்குச் சொந்தமான அனைத்தையும் அடித்து உடைத்து சேதப்படுத்தினர். இந்த அட்டூழியம் இரவில் தொழுகை முடித்து வீடுதிரும்பிக் கொண்டிருந்த ஒரு இளம் வாலிபனை அவனின் தாடி மற்றும் தொப்பியை கொண்டு முஸ்லீம் என்று அடையாளம் அறிந்து சாகும்படியாக அடித்து உதைத்ததில் முடிவுற்றது. இந்த ஒவ்வொரு மோதல்களுக்கும் பகையுணர்ச்சியை உரமிட்டு வளர்க்கும் வெறிகொண்ட இந்து வகுப்புவாத அமைப்புகளே காரணமாகும். எந்த ஒரு வன்முறைச் சம்பவமும் தன்னிச்சையாக நிகழ்ந்தவை அல்ல. அனைத்தும் வகுப்புவாத வெறிபிடித்தவர்கள் ஆர்எஸ்எஸ், பிஜேபி மற்றும் சங்கபரிவாரத்திற்குள் புகலிடம் அமைத்துக் கொண்டு மிகச் சூழ்ச்சிகரமாக திட்டமிட்டு கிளர்த்திவிடுபவையாகும்.

## ‘லவ் ஜிகாத்’

“சகுனியிடம் சதித்திட்டத்திற்கா பஞ்சம்” என்பார்கள். இந்த கூற்று இந்துத்துவப் போர்வைக்குள் ஒளிந்து கொண்டு வகுப்புவாத வன்முறையைத் தூண்டிவிட தீவிரமாகச் செயலாற்றும் பிஜேபி, ஆர்எஸ்எஸ்ஸின் தலைவர்களுக்கு நன்றாகவே பொருந்தும். அவர்கள் முஸ்லீம் சமூகத்தவருக்

தொடர்ச்சி 5ம் பக்கம்

# சிறிய வட்டார சர்ச்சைகளை பயன்படுத்தி சங் பரிவாரம் முஸ்லீம் மக்களுக்கு எதிராக கோபத்தையும் சந்தேகத்தையும் தூண்டுகிறது

4ம் பக்கத் தொடர்ச்சி

கெதிராக வெறுப்புப் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்துவிட்டு அதன் மூலம் வகுப்புவாத துருவமயப்படுத்தலை கிளறிவிட்டு இணக்கமாக வாழ்ந்து வரும் இரண்டு மதசமூகத்திலும் இருந்துவரும் உருக்குலைந்த மனநிலையை பயன்படுத்தி வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று எண்ணுகிறார்கள்.

பிரதான வகுப்புவாத ஆர்எஸ்எஸ்ஸூம்பிஜேபியும் சமீபத்தில் முன்னிருத்தும் பேரபாயமான விஷயம் நாம் மேலே குறிப்பிட்ட 'லவ் ஜிகாத்' என்பதாகும். இந்த லவ் ஜிகாத் என்ற வார்த்தைக்கு 'முஸ்லீம் வாலிபர்கள் இந்துக் குடும்பத்துப் பெண்களைக் குறிவைத்து அவர்களை காதல் வலையில் சிக்கவைத்து, திருமணம்செய்து மதம் மாற்றுவது' என ஆர்எஸ்எஸ்–பிஜேபியால் பொருள் சொல்லப்படுகிறது. 'லவ் ஜிகாத்' என்பது இந்து பெண்களை குறிவைத்து கவர்ந்திழுத்து ஏமாற்றுவதற்காக முஸ்லீம் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுவதுதான் என்ற இவர்களின் கருத்து துளியும் அறிவுக்குப் பொருந்துவதாக இல்லை.

ஒருவேளை அப்படி ஒரு சதித்திட்டம் இருக்குமானால் யார் அதன் தலைவர்கள்? அவர்கள் எங்கே இந்த பயிற்சி முகாம்களை நடத்துகிறார்கள்? அவர்கள் கூட்டங்கள் நடத்தியது குறித்த ஏதேனும் ஆவணங்கள் இருக்கிறதா? நமது புலனாய்வுத் துறையினரோ அல்லது காவல்துறையினரோ இந்த சூழ்ச்சி குறித்து எப்போதாவது அறிய நேர்ந்திருக்கிறதா? அதற்கான ஆதாரங்கள் ஏதேனும் இருக்கின்றதா? ஒன்றும் இல்லை. ஆனால் இந்தக் கருத்து ஒருவரை நம்பத்தூண்டுகிறது. **2009**இல் நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் கேரளாவிலும் கர்நாடகாவிலும் இதுபற்றிய விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கர்நாடக புலனாய்வுத் துறையினர் இது குறித்து எந்த ஆதாரமும் இல்லை என்று அறிக்கை தந்தனர். கேரள காவல்துறையினர் இந்து ஜாகிருதி என்ற இணையதளம் வெறுப்பையும் பொய்ப் பிரச்சாரங்களையும் செய்வதாக அதன்மீது வழக்குத் தொடுத்தனர்.

ஆனால் இதில் இன்னொரு வேடிக்கை என்னவெனில், 'லவ் ஜிகாத்' என்ற இந்தக் கருத்தைப் பிரச்சாரம் செய்பவர்கள் பெரும்பாலும் பெண்களின் உரிமைகளுக்காக குரல்கொடுப்பவர்களாக இருப்பதுதான். அவர்கள் பெண்களின் தேர்ந்தெடுக்கும் உரிமைக்காகவோ, பரஸ்பர நம்பிக்கைக்காகவோ, அல்லது ஜாதி, மதம் கடந்த திருமணங்களுக்கோ ஆதரவளிப்பதில்லை. உண்மையில் அவர்கள் சொல்வதென்னவென்றால், இந்துப் பெண்கள் முடிவெடுக்கும் மூளையற்றவர்கள். ஆகவே அவர்கள் ஏமாற்றுக்கார முஸ்லீம் வாலிபர்களின் வலையில் சிக்கிக் கொண்டுவிடாமல் இருக்க பாதுகாப்பு அவசியம் என்பதுதான். 'லவ்ஜிகாத்' என்ற இந்தப் பிரச்சாரம் வகுப்புவாத வன்முறைத் தீயைப் பற்றவைப்பதுடன் ஏற்கனவே துருவமயப்பட்ட சூழ்நிலைமையில் மேலும் இறுக்கத்தைக் கொண்டு வருகிறது. சமூக வலைத்தளங்கள் மூலமும் விஷமமான வதந்திகள் மூலமும் சமூகச்சூழல் மேலும் மேலும் பலவீனப்படுகிறது.

## வகுப்புவாதப்பிரிவினையை பூதாகரமாக்க பிஜேபியும் ஆர்எஸ்எஸ்ஸூம் திட்டமிட்டுக் காய்நகர்த்துகின்றன

ஒரு வருட காலத்திலேயே இந்த 'லவ் ஜிகாத்' கொள்கை உபியில் பிஜேபியின் பிரச்சாரத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு யுக்தியாக மாறிவிட்டது. வகுப்புவாத கலவரங்கள், பதற்றங்கள், கொந்தளிப்புகள் என நடைபெற்ற அனைத்திற்கும் அடிப்படைக்காரணமும் இதுவே என்று முசாபர் நகர் போன்ற கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் நகரங்களிலும் மற்றும் பிற இடங்களிலும் இருக்கின்ற சமூகத்தலைவர்கள், பத்திரிகையாளர்கள் அனைவரும் திரும்பத் திரும்பக் கூறும் அளவிற்கு இந்த 'லவ் ஜிகாத்' கொள்கை பரவிவிட்டது. ஒவ்வொரு வீட்டிலும் அது ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கிராமங்களில் அக்கம்பக்கத்தவர்களிடையே சமூகத்தவர்களுக்கிடையிலான உறவுகளில் ஒரு புதிய நச்சு கலக்கப்பட்டுவிட்டது. மேலும் தனது வாழ்க்கைத் துணையைத் தீர்மானிக்கும் வாய்ப்பு மற்றும் காதல் சுதந்திரத்தைப் பெண்களுக்கு மறுப்பதற்கும் மத அடிப்படைவாதிகளுக்கு இது அனுமதி வழங்கியிருக்கிறது.

"இந்த விஷயத்தில் அதிக எண்ணிக்கையில் பாதிக்கப்படுபவர்கள் இந்துவாகவும் பாதிப்பை ஏற்படுத்துபவர் முஸ்லீமாகவும் இருப்பது கண்டு நாங்கள் அதிர்ச்சியுற்றோம். இதை ஆய்வு செய்வதும் மற்றும் அதற்கேற்றவாறு செயல்படவேண்டியதும் எமது பொறுப்பாகும்" என்று உபி மாநிலத்தின் பிஜேபி செய்தியாளர் விஜய் பகதுர் பதாக் கூறுகிறார்.

மேலும் அவர், இது உண்மையில் ஒரு "சதித்திட்டமா" என்பது குறித்துக் கண்டறிய பிஜேபி முயன்றுவருகிறது என்றார். மதுராவில் கடந்த மாதம் நடத்த உத்தேசிக்கப்பட்டிருந்த பிஜேபின் செயற்குழு கூட்டத்திற்கு முன்பாக பிஜேபியின் மாநிலத் தலைவர் லஷ்மிகாந் பாஜ்பாய் "ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர்தான் இந்த 'லவ் ஜிகாத்'தில் ஈடுபட்டுவருகிறார்கள்" என்றார். மேலும் "இது ஒரு முக்கியமான பிரச்சினை. இது குறித்து விரிவாக மதுரா கூட்டத்தில் பேசவேண்டியிருக்கிறது" என்றார். அவர் அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை "அவர்கள் ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலேயே பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வதற்கு சான்றிதழ் பெற்றிருக்கிறார்களா? ... இளையதலைமுறையினர் இந்த லவ் ஜிகாத்துக்கு எதிராக விழிப்புடன் இருக்கவேண்டும். இம்மாதிரியான செயல்களில் ஈடுபடுபவர்களின்பால் அரசாங்கம் ஏன் கருணையோடு இருக்கிறது? பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த பெண்களை மதமாற்றம் செய்வதற்கு அவர்கள் லைசென்ஸ் பெற்றிருக்கிறார்களா? ... இதில் குற்றம்சுமத்தப்படும் **99.99%** பேர் முஸ்லீம்கள்..." இடைத்தேர்தலில் பிஜேபியின் முதன்மை பிரச்சாரத் தலைவராக திடீரென்று அறிவிக்கப்பட்ட பிஜேபியின் தலைவரான இவர் சிறுபான்மை முஸ்லீம் மக்கள் மீது எவ்வாறெல்லாம் விஷத்தைக் உமிழ்ந்து வருகிறார் என்பதை இதன் மூலம் தெளிவாக நாம் காண முடியும்.

உபியின் கிழக்குப்பகுதியில் செல்வாக்குப் பெற்றவரும் சமீபத்திய இடைத்தேர்தலில் முதன்மை பிரச்சாரகராக அறிவிக்கப்பட்டவரும் பிஜேபியின் கோரக்பூர் எம்பியும் இந்துத்துவத்தை உயர்த்திப்பிடிப்பவருமான யோகி ஆதித்யநாத் இதனினும் ஒரு படி மேலாக இம்மாதிரியான சர்ச்சைகளில் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வந்திருக்கிறார். இதற்குமுன்பு அவர் சட்டவிரோதமாக கால்நடைகளை வெட்டுவது குறித்தும், வங்காள தேசத்தினர் இந்தியாவிற்குள் குடிபெயர்வது குறித்தும் வலுக்கட்டாயமாக மதமாற்றம் செய்வது குறித்தும் பிரச்சினையைக் கிளப்பி பிரச்சாரங்களைச் செய்தார். "லவ் ஜிகாத் பிரச்சினை இடைத்தேர்தலில் மிக முக்கியப் பிரச்சினையாகும் ..... நான் இதுகுறித்து கடந்த நான்காண்டுகளாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த அபாயம் கேராளாவில் துவங்கி தற்போது மேற்கு உபி வரைக்கும் பரவியிருக்கிறது" என்றார்.

மேலும் இந்த யோகி ஆதித்யநாத், "கோரக்பூரில் முஸ்லீம்கள் மொகரம் பண்டிகையின் போது 'டாஷியா' பேரணி நடத்த அனுமதி மறுக்கப்படும்" என்று எச்சரித்தார். மேலும் அவர், ஒரு இந்துப் பெண் இஸ்லாத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டால் **100** முஸ்லீம்பெண்கள் இந்துமதத்திற்கு வலுகட்டாயமாக மதமாற்றம் செய்யப்படுவார்கள் என்றார். மற்றொரு வீடியோ பதிவில் அவர், ஒவ்வொரு அப்பாவி இந்துவின் மரணத்திற்கும் காரணமானவர்கள் பழிவாங்கப்படுவார்கள் என்றும் லவ் ஜிகாத் என்ற பெயரில் இந்துப் பெண்களுக்கு நடக்கும் எதையும் நான் சகித்துக் கொள்ள மாட்டேன்" என்றும் முழங்கினார்.

பிஜேபியும் ஆர்எஸ்எஸ்ஸூம் லவ் ஜிகாத் என்ற பூதத்தைக் கிளப்பி, அதன் மூலம் தமது வகுப்புவாத வன்முறைத் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றிக் கொண்டுவிடலாம் என்பதில் மிக முனைப்போடு இருக்கிறார்கள் என்பது ஆகஸ்ட் **24** இல் மதுராவில் நடந்த செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட "அரசியல் தீர்மானத்திலிருந்து" தெளிவாகத் தெரியவருகிறது. அதில், "ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்த பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு பலியாவதும் மற்றொரு சமூகத்தைச்சேர்ந்த ஆண்கள் இதற்குக் காரணமாக இருக்கின்ற மாநிலத்தில் நடைபெறுகின்ற இந்த சம்பவங்கள் எதேச்சையாக நடந்தவைகளாக இருந்தாலும் அல்லது திட்டமிட்டு நடத்தப்பட்டாலும் இந்தப் பிரச்சினைகள் என்பது மிகவும் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டியவை" எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் இந்த லவ்ஜிகாத் என்று போலியாகச் சொல்லப்படுகின்ற விஷயத்திற்கு ஆர்எஸ்எஸ் பிஜேபியின் கட்டுக்கதைகளைத் தவிர எந்த வலுவான ஆதாரமும் இல்லை என்றாலும்கூட, இவையனைத்தும் 'திட்டமிட்டு' செய்யப்படுவதாகக் குற்றம்சாட்டி பிரச்சினையை பூதாகரமாகக் கிளப்புவதிலிருந்து சகோதரச்சண்டைகளையும் வகுப்புவாத இரத்தக் களரியையும் திட்டமிட்டு பரப்புவதில் கைதேர்ந்தவர்களென்று அறியப்படும் காவிப்படைகளின் நோக்கத்தை நாம் இதன் மூலம் புரிந்துகொள்ள முடியும். மேலும் ஒரு பொய்யை திரும்பத் திரும்பச் ஆயிரம்முறை சொல்வதன் மூலம் அதனை உண்மை என்று மக்களை நம்பவைக்கமுடியும் என்ற ஜெர்மனியின் பாசிஸ்ட் கோயபல்ஸின் தந்திரத்தையே இது நமக்கு நினைவூட்டுகிறது.

வகுப்புவாதப் பதற்றத்தைப் பரப்பவும் உள்நோக்கத்துடன்கூடிய துஷ்பிரச்சாரத்தை சிறுபான்மை மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்துவிட ஏதுவாக யாரெல்லாம் சிறுபான்மை முஸ்லீம் சமூகத்தின் நபர்களால் ஏமாற்றப்படுகிறார்களோ அல்லது பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்களோ அவர்களுக்கு சட்டரீதியிலான உதவிகளைச் செய்ய பிஜேபிக்கு ஆர்எஸ்எஸ் வழிகாட்டுதல் வழங்கியிருக்கிறது. இந்த முஸ்லீம் எதிர்ப்பு துஷ்பிரச்சாரத்தை உச்சத்திற்குக் கொண்டு செல்கின்ற வகையில் முஸ்லீம்கள் காஷ்மீரை உரிமை கோருவதைப்போல உபியையும் எடுத்துக் கொள்ள விரும்புகிறார்கள் என்றும் அவர்கள் இந்துக்களின் செல்வங்களையும் பெண்களையும் லவ்ஜிகாத் மூலம் அபகரிக்க விரும்புவதாகவும் காவிப்படைகள் தற்போது பிரச்சாரம் செய்து வருகின்றன. சிறுபான்மை முஸ்லீம் சமூக இளைஞர்களிடம் ஜாக்கிரதையுடன் இருக்கும்படி வேண்டுகோள் விடுக்கும் குறுந்தகவல்கள், துண்டுப்பிரசுரங்கள் விஸ்வஹிந்து பரிஷத் மற்றும் சங்கப்பரிவாரங்களினால் தயாரிக்கப்பட்டு வதோதராவில் வெளியிடப்பட்டிருக்கின்றன. உபியில் மயின்புரியிலும் இதுபோன்ற பிரசுரங்கள் மக்களின் கைகளில் காணப்பட்டன. வதோதராவிலும் மயின்புரியிலும் லோக்சபா இடைத்தேர்தல் நடந்தது என்பதை இங்கு குறிப்பிடவேண்டும்.

வகுப்புவாத உரமேற்றப்பட்ட உபியிலும் மற்றும் பிற வகுப்புவாதப்பதற்றம் நிறைந்த பல பகுதிகளிலும் செயற்கையாக வகுப்புவாதத் துருவமயத்தை ஏற்படுத்தி அதன்மூலம் வாக்குகளை கவர்ந்துகொள்ள ஆர்எஸ்எஸ் பிஜேபியின் தலைவர்கள் லவ் ஜிகாத்தைக் கையில் எடுத்துக் கொண்டுவிட்டார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. தொடர்ந்து தேர்தல் அறுவடைக்காக வகுப்புவாதப் பதற்றங்கள் மிக வெறுக்கத்தக்க வகையிலும் ஆபத்தான வகையிலும் கிளர்த்திவிடப்பட்டு வருவதாலும் அனைவருக்கும் பொது எதிரியாகச் சித்தரிக்கப்படும் முஸ்லீம் மற்றும் 'பிற' சமூகத்தினருக்கு எதிராக உயர்சாதி இந்து ஒடுக்குமுறையாளர்களின் பக்கம் பெரும்பான்மை தாழ்ந்தசாதி இந்துக்களை ஓரணியில் கொண்டுவருவதற்கான முயற்சிகள் நடப்பதாலும் நாட்டில் கொஞ்சம் கொஞ்சமாக கண்ணுக்குப்புலப்படாத ஒரு பய உணர்வு அதிகரித்துவருகிறது. சரியாகச் சிந்திக்கக் கூடிய மக்கள் கருதுவதுபோல் யோகி ஆதித்யநாத் போன்றவர்கள் சட்டத்தின் ஆட்சி, அரசியல் அமைப்புச்சட்ட நிர்வாகம் இவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டு திருப்பியடிக்கும் வன்முறை, கடத்தல், கண்காணித்தல் இவைகள் மூலம் மக்களைத் துண்டாடி தேர்தல் அறுவடை செய்து பலன்பெற விரும்புகிறார்கள்.

## வகுப்புவாத பரவலின் பின்னணியில் பூர்ஷூவா வர்க்க உள்நோக்கம்

இரத்தத்தை உறையவைக்கும் இந்த சகோதர மோதல்கள் வகுப்புவாத பிஜேபி மற்றும் ஆர்எஸ்எஸ்ஸின் திட்டமிடப்பட்ட உள்நோக்கம்கொண்ட ஏற்பாடாக இருந்துவரும்வேளையில், மக்களின் வறுமையிலும், துன்பத்திலும், பரஸ்பரம் நம்பிக்கையின்மையிலும், ஒற்றுமையின்மையிலும் தங்களின் அரசியல் ஆதாயத்தைப் பெற்றுவரும் மற்றபிற பூர்ஷூவாக்கட்சிகளான காங்கிரஸ், சமாஜ்வாதி, பிஎஸ்பி மற்றும் இன்னபிற கட்சிகள் இதில் கறைபடியாதவர்கள் அல்ல. கடந்த ஆண்டு முசாபர் நகரில் ஆர்எஸ்எஸ்–பிஜேபியால் தூண்டிவிடப்பட்டு வெடித்த கலவரத்தின் போது அதை நன்றாகக் காணமுடிந்தது. இதுநாள்வரையில் சிறுபான்மை

தொடர்ச்சி 6ம் பக்கம்

# சிறுபான்மையினரை பழித்தல் ஆர் எஸ் எஸ் – பி ஜே பி யின் பிரதான திட்டங்களுள் ஒன்று

5ம் பக்கத் தொடர்ச்சி

யினர் மற்றும் தாழ்ந்த ஜாதி என அழைக்கப்படுபவர்களின் வாக்குகளை வைத்து தனது வாக்கு வங்கி அரசியலை நடத்திவந்த சமாஜ்வாதிக் கட்சி தற்போது சமூக, ஜாதிய இனத்தவர்களிடையே பல்வேறுபட்ட பிரிவினை அரசியல் அதிகரித்துவரும் பின்னணியில் தங்களின் வாக்கு வங்கி எல்லைக்குள் செயல்படமுடியாமல் வகுப்புவாத கலவரங்களைத் கிளர்த்திவிட்டு அதன் மூலம் தங்களின் அரசியல் ஆதாயத்திற்கான வாய்ப்புகளை அறுவடை செய்ய முடியும் என்று ஆவல் கொண்டுள்ளனர். ஆர்எஸ்எஸ்–பிஜேபியின் குண்டர்களால் கலவரம் தூண்டிவிடப்பட்ட மறுகணமே சமாஜ்வாதிக் கட்சியின் தலைமை, சிறுபான்மை இனத்தவர்களைச் சேர்ந்த ரெளடிகளை களத்தில் இறக்கிவிட்டு எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்தது. எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதிலிருந்து நிர்வாகத்தைத் தடுத்துவைத்தது. ஆகவே கலவரம் தொடர்ந்தது. அப்பாவி மக்களின் இரத்தம் மண்ணில் பாய்ந்தோடியது. மக்களின் துன்பமும் வேதனையும் அதிகரித்தது. இப்போது அவர்களால் சிறுபான்மையினரின் வாக்குளைச் சுலபமாக கவர முடியும்.

சமாஜ்வாதி மட்டுமல்ல மாயாவதியின் பிஎஸ்பியும் கூட தனது குறுகிய குறுங்குழுவாத அரசியல் நலன்களுக்காக நயவஞ்சகமாக எதிர் வகுப்புவாத வன்முறைகளைத் தூண்டிவிட்டது. நிலைமையை மேலும் மோசமாக்கியதில் காங்கிரஸிற்கும் பங்குண்டு. அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசாங்கம் இந்த வகுப்புவாத துருவமயத்திலிருந்து தங்களின் அரசியல் ஆதாயத்தை அறுவடைசெய்யும் குறுகிய அரசியல் நிலைபாட்டின் காரணமாக இந்த கலவரத்தை ஒடுக்க கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து தங்களின் நிர்வாகத்தைத் தடுத்து வைத்தனர்.

நடந்தவை அனைத்தும், கேடுகெட்ட பூர்ஷுவா பாராளுமன்ற அரசியல் உப்பரிகையின் மாடத்தில் திட்டமிடப்பட்டு அரசியல்கட்சிகளால் நடத்தப்படும் உயர்மட்ட அரசியல் விளையாட்டுகள்தான் என்பது வெட்டவெளிச்சமாகத் தெரியவருகிறது. வகுப்புவாத வன்முறையில் வழிந்தோடும் இரத்தக்களரியில் தங்களின் கறைபடிந்த கரங்களால் வாக்குகளை அள்ளும் இந்த அரசியல் விளையாட்டில் பங்கெடுக்கும் அனைத்துக் கட்சிகளுமே இரக்கமற்றவைகள். ஆயினும்கூட வகுப்புவாதப் பதற்றம் நிறைந்த சூழ்நிலைமையை எப்போதும் வைத்திருக்க முஸ்லீம் எதிர்ப்பு விஷத்தை மக்கள் மனதில் கலந்து வகுப்புவாதப் பதற்றத்தை முடுக்கிவிடுவதில் பிரதானக் குற்றவாளிகள் ஆர்எஸ்எஸ் பிஜேபி மற்றும் அதன் காவிப்படைகள்தான் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அதிகாரத்தில் பிஜேபி! அரியணையில் வகுப்புவாத மோடி! அவரின் விசுவாசி அமித்ஷா மற்றும் யோகி ஆதித்யநாத் போன்ற பிறரும் நிர்வாகத்தில் நிறைந்திருக்க, அப்பப்பா! நாட்டில் மதநல்லிணக்கமும் ஒற்றுமையும் சகோதரத்துவமும் கொடிகட்டிப் பறக்குமன்றோ!

ஆர்எஸ்எஸ் இந்தியாவை இந்துதேசமென்று நீண்டகாலமாக வாதிட்டுவருவதுடன் யாரெல்லாம் இந்துமதம் அல்லாத பிற மதங்களைப் பின்பற்றி வருகிறார்களோ அவர்கள் இந்து மதத்தையே உயர்வாகக் கருதவேண்டுமென்றும், இந்து இனத்தையும் கலாச்சாரத்ததையும் தவிர வேறெதையும் அவர்கள் பெருமையாகக் கருதக்கூடாதென்றும் அவர்கள் தங்களுக்கென்று தனித்த அடையாளங்களை இழந்து இந்து இனத்தில் ஐக்கியமாக வேண்டுமென்றும் சொல்லிவருகிறது. அவ்வாறு தனித்த அடையாளங்களைக் கொண்டவர்கள் இந்து தேசத்திற்கு முழுமையாக அடிபணிந்திருக்கவேண்டும் எதற்கும் உரிமை கோரக்கூடாது, சலுகை கேட்கக்கூடாது, குறைந்தபட்சம் எந்த முன்னுரிமையோ அல்லது குடியுரிமையோகூட கேட்கக்கூடாது, இம்மாதிரியான கொள்கைகளை வைத்துக் கொண்டிருக்கும் ஆர்எஸ்எஸ், முஸ்லீம் விரோதத்தையும் அதன் நிகழ்ச்சிநிரலில் பிரதானமாக வைத்திருக்கிறது. ஆர்எஸ்எஸ்ஸின் அரசியல் ஊதுகுழலான பிஜேபி அதிகாரத்தில் இருந்துவரும் இந்தத் தருணத்தில் மேற்குறிப்பிட்ட அவர்களின் நச்சுக் கொள்கைகள் அனைத்தையும் மிக மோசமான வகையில் சமுதாயத்தில் கலப்பதை நாம் கண்ணெதிரே கண்டுவருகிறோம். இவ்வாறான ஆர்எஸ்எஸ்ஸின் கொள்கைகள் அனைத்தும் வரலாற்றை மறுப்பதும், தர்க்கவாதத்தை தலைகீழாக்குவதும் அப்பட்டமான கண்மூடித்தனமான வெறிவாதத்தை ஆதாரமாகக் கொண்டதும், புனைந்துரைக்கப்படும் கற்பனை எண்ணப்போக்குகளுமாகும். நமது சுதந்திர இயக்கத்தின் தலைவர்களோ அல்லது இந்துமதத்தை உயர்த்திப்பிடித்தவர்களோ இம்மாதிரியான பிறமத துவஷே நச்சுச் சிந்தனையை ஒருபோதும் அனுமதித்தில்லை.

ஆளும் வர்க்கத்தின் அபிலாஷைகளுக்கு ஏற்ப உழைக்கும் மக்களிடையே பரஸ்பரம் நம்பிக்கையின்மையையும், அவநம்பிக்கையையும், இணக்கமின்மையையும், பிரிவினைக் கொள்கைகளை இட்டுக் கட்டுவதில் தேர்ச்சியுடையவர்கள் மற்றும் அழுகிச் சீரழிந்த பூர்ஷுவா ஒடுக்குமுறை வர்க்கத்தின் ஆட்சியை நீடிக்கச் செய்வதற்கு மக்களிடம் பிளவை ஏற்படுத்த அவசியமான எந்த ஒரு சிந்தனையையும் கவ்விப்பிடித்துக் கொள்கிற வெகுசில தன்னிச்சையான சிந்தாந்தவாதிகளின் வினோதமான சிந்தனைகளின் தொகுப்பாகவே ஆர்எஸ்எஸ் பிஜேபி மற்றும் அதன் வெவ்வேறு ரகமான அமைப்புகள் உருவாக்கம் பெற்றிருக்கின்றன. மக்கள் தங்களுக்குள் பிரிந்துகிடப்பார்களெனில், தங்களுக்குள் ஒருவரை ஒருவர் தூற்றிக் கொள்வார்களெனில், சகோதர மோதல்களில் ஈடுபட்டுவருவார்களெனில் சுரண்டல் பூர்ஷுவாக்கள் நடத்திவரும் மோசடியான ஆட்சிக்கெதிராக மக்கள் வெடித்தெழும் சாத்தியத்திலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள். ஆகவேதான், இந்திய ஆளும் வர்க்கம் வகுப்புவாதத்தையும், அடிப்படைவாதத்தையும் பரப்பும் ஆர்எஸ்எஸ் பிஜேபியை மறைமுகமாக ஆதரிக்கிறது.

ஆளும் வர்க்கத்தின் தயவைப்பெற்று அதிகாரம் மற்றும் அந்தஸ்த்துள்ள பதவிகளில் இடம்பெறுவதற்காக நீண்டகாலத்திற்கு முன்பே ஜனநாயக இயக்கப்பாதையைக் கைவிட்டுவிட்டு ஆதாயக்கணக்கோடு அமைதிகாத்துவரும் சிபிஐ, சிபிஐ(எம்) போன்ற போலி இடதுசாரிகளும்கூட இந்த வகுப்புவாத வைரஸ் பரவுவதற்கு சமஅளவில் பொறுப்பானவர்களே. வெகுஜன இயக்கப்பாதையைக் கைவிட்டதன் காரணமாக நாட்டில் நன்கு அணிதிரட்டப்பட்ட ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கங்கள் பலவீனப்பட்டுவிட்டன. அதன் விளைவு இன்றைக்கு பிரதான வகுப்புவாத ஆர்எஸ்எஸ் பிஜேபி உள்ளிட்ட வலதுசாரி பிற்போக்கு பேரபாயத்துடன் தலைதூக்கியிருப்பதுடன் மக்களிடையே பிரிவினையை வளர்ப்பதற்கான நோக்கத்துடன் கலகமூட்டும் சிந்தனைகளையும் மூர்க்கமாகப் பரப்பிவருகிறது. ஆர்எஸ்எஸ் பிஜேபியின் சிந்தாந்தக் கூறுகளையும் மற்றும் அவற்றின் பேரபாயம் மிகுந்த கருத்துக்களையும் எதிர்வகுப்புவாதத்தில் ஈடுபட்டுவருபவர்களையும் துணிச்சலோடு எதிர்க்க வேண்டியது அவசியமாக இருந்ததுடன் அதன் மூலம் வகுப்புவாத வியாபாரிகளை மக்களிடம் தோலுரித்துக்காட்டி ஒரு சரியான சிந்தனை மக்களிடம் உருவாக துணைபுரிவதும் அவசியமாக இருந்தது. ஆனால் இந்த ‘பெரிய’ இடதுசாரிகள் அதற்கான எந்த முன்முயற்சியையும் எடுக்காததுடன் வாக்குவங்கி அரசியல் நடத்துவதற்காக வகுப்பு வாதத்திற்கு எதிராக அவ்வப்போது தொண்டை கிழியக் கத்தியது தவிர எதையும் செய்யவில்லை. இவ்வாறான அவர்களின் செயல்பாடுகள் உண்மையில் வகுப்புவாத சக்திகள் மேலும் மேலும் பலம்பெறுவதற்கு வாய்ப்பைதான் வழங்கியிருக்கிறது.

### இணக்கமின்மையையும் கொந்தளிப்பையும் மக்கள் விரும்புவதில்லை

ஒரு நவீன சமுதாயத்தில் வகுப்புவாதத் தொல்லைக்கு துளியும் இடமில்லை. பலரகமான அரசியல் கட்சிகள் தங்களின் உள்நோக்க அரசியல் நலன்களுக்காக மக்களை வகுப்புவாத, ஜாதியவாத, இனவாத அடிப்படையில் பிரிக்கவிரும்புவதுடன் அவர்களிடையே பரஸ்பரம் வெறுப்பையும் பந்தமின்மையையும் கிளர்த்திவிட வகுப்புவாத, ஜாதியவாத, இனவாதக் கலவரங்களை திட்டமிட்டு நடத்துகிறார்களே ஒழிய அனைத்து ஜாதி, மத, இனத்தை சேர்ந்த பரந்துபட்ட உழைக்கும் மக்கள் தங்களுக்குள் எந்தவொரு பிரிவினையும், பரஸ்பரம் நம்பிக்கையின்மையும் சகிப்புத்தன்மையின்மையும் உருவாவதைத் துளியும் விரும்புவதில்லை. அவர்கள் ஒருபோதும் இதுபோன்ற சகோதர மோதல்களில் ஈடுபடுவதுமில்லை. தங்களுக்கிடையேயான சகோரத்துவமும் இணக்கமும் சிறுதேனும் பாதிக்கப்படுவதை ஒருபோதும் விரும்புவதுமில்லை.

வகுப்புவாத மிருகங்களின் கூரிய பற்கள்தான் வறுமையிலும் இன்னல்களிலும் உழன்றுவரும் அப்பாவி மக்களின் இரத்தத்திலும் சதையிலும் விருந்துண்ண இரைதேடி அலைகிறது. இந்த வகுப்புவாதக் கெடுநோக்கம் கொண்டவர்கள் அமைதியாக வாழ்ந்துவரும் அண்டை அயலாரிடத்தில் நச்சுச் சிந்தனையைப் பரப்ப விரும்புவது மட்டுமல்ல, அவ்வாறு கிடைக்கும் சந்தர்ப்பங்களையும் சம்பவங்களையும் பூதாகரமாக்கி உச்சத்திற்குக் கொண்டு சென்று, இதுவரையில் இணக்கமாக அக்கம்பக்கம் வசித்துவந்தவர்களும் இனிமேல் அங்கு சேர்ந்து வாழ்வதற்கு அஞ்சுகிறவகையிலும் நிலைமையைக் கொண்டுசெல்கிறார்கள்.

தேசத்தின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தலாக முன்னிற்கும் – மனித உணர்வுகளையும் நாகரீகத் தன்மையையும் கிளர்த்திவிடப்பட்ட வெறியுணர்வுகள் ஆட்டுவிக்க அனுமதிக்கும் ஆர்எஸ்எஸ் பிஜேபியின் பிரதான வகுப்புவாதத் திட்டத்திற்கு எதிராக ஒன்றுபட்ட உரத்த குரல் எழுப்பவேண்டும். இந்துத்துவ வெறிகொண்டவர்கள் மக்களிடமிருந்து தனிமைப் படுத்தபடவேண்டும். அதோடு இந்த ஆர்எஸ்எஸ் பிஜேபியின் மிக மோசமான வகுப்புவாத சூழ்ச்சிக்கெதிராக வகுப்புவாதத்தை எதிர்க்கும் அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஒன்றிணைத்து நாடு தழுவிய அளவில் ஒன்றுபட்ட சக்திவாய்ந்த வகுப்புவாத எதிர்ப்பியக்கங்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இந்துத்துவம், இந்துதேசம், முஸ்லீம் துவேஷம் போன்ற நச்சுக் கொள்கைகளுக்கு பலமான தோல்வியைக் கொடுக்கின்ற வகையில் தீவிர சித்தாந்த போராட்டத்தை கட்டவிழ்த்துவிட வேண்டியது மிக அவசியமாகும்.

மனித இனத்தின் எதிர்காலத் தலைவிதி வகுப்புவாத பிணந்தின்னிகளால் ஆட்டுவிக்கப்படாமல் இருக்கட்டும்!

## பாசிசமும் இடதுசாரி . . .

3ம் பக்கத் தொடர்ச்சி

கூறினேன். அரசியல் இயக்கத்தில் ஈடுபட்டு தங்களை புடம்போட்டுக்கொண்டதன் மூலம் புரட்சிக்கு உகந்தவகையில் அதற்கேற்ற கலாச்சாரத்தையும் மனோபாவத்தையும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கேனும் கைவரப்பெற்ற மக்களால்தான் புரட்சியை நடத்த முடியும். மாறாக, இவ்வாறு செய்வதால், புரட்சி என்ற பெயரில் பிற்போக்குக்கான அடித்தளத்தை அமைப்பதாகவே முடியும். இதுதான் இந்திய மண்ணில் திரும்பத்திரும்ப நடந்தது. இவ்வாறாக, இவர்கள் நடத்தும் இத்தகைய அபாயகரமான தவறான அரசியல் மற்றும் நடவடிக்கைகள் காரணமாக சமுதாயத்தில் நல்லது கெட்டதை சீர்தூக்கி ஆராயும் மனோபாவம் மற்றும் தர்க்கரீதியான சிந்தனை ஆகியவை வீழ்ந்துவருவதே காங்கிரசீய பிற்போக்கு ஆழமாக ஊடுருவுவதற்கான வாய்ப்பை உருவாக்கிவிட்டது.

ஒரு கட்சி புரட்சிகர கட்சியாக இல்லாதிருக்குமானால், அதன் வழி தவறானதாகவும் புரட்சியைப் பற்றிய அதன் கருத்தியல் தவறானதாகவும் இருக்குமானால் புரட்சியோடு ஆடும் விளையாட்டில் மக்களின் உயிர்த்தியாகமும் கட்சித் தொண்டர்களின் அனைத்துவகையான சுயத்தியாகங்களும் வீணாகிப்போகும். இதன் விளைவாக மக்களிடையே குழப்பம் தோன்றும். இதை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு பிற்போக்குத்தனம் மேலும் வலுப்பெறும். கோட்பாடுகள், சித்தாந்தம் கலாச்சாரம், நீதிநெறிகள், அரசியல் பகுப்பாய்வு என அனைத்து அம்சங்களிலும் கட்சியின் வரலாற்றை ஆய்வு செய்ததில் அது போலிப் புரட்சிகர கட்சியாகவும் புரட்சிகரமல்லாத கட்சியாகவும் படிப்படியாக சீரழிந்தும் இருப்பது அம்பலமாகி அது பெரிய கட்சி என்ற ஒரே காரணத்திற்காக அதை நீங்கள் ஆதரிப்பீர்களேயானால் அக்கட்சி நிச்சயம் இயக்கத்தை தவறாக வழிநடத்தும், அதனால் ஏற்படும் விளைவுகளும் மேலும் மோசமானதாக இருக்கும். ஒரு கட்சி சிறியதா, பெரியதா என்பது முக்கியமான கேள்வி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், அதைவிட முக்கியமான விஷயம் அதன் அரசியல் சரியானதா, இல்லையா என்பதும் அது உண்மையிலேயே புரட்சிகரமான கட்சியா என்பதுமேயாகும்.

(பாசிசமும் இடதுசாரி ஜனநாயக இயக்கத்தில் நீதிநெறி ஒழுக்கங்களின் நெருக்கடியும் என்ற தலைப்பிலான படைப்பிலிருந்து – சிப்தாஸ்கோஷ் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள், தொகுதி – 4)

## உயர்மட்ட நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனம்

# கொலிஜியம் அமைப்பை ரத்து செய்வது நீதித்துறை சுதந்திரத்தின் மிச்ச சொச்சங்களையும்கூட நீக்கிவிடும்

2ம் பக்கத் தொடர்ச்சி

களையும் பாதித்துள்ளது. தேசிய மற்றும் பிராந்தியத்தின் பிரதான கட்சிகளின் அரசியலும் அரசியல்வாதிகளும் ஊழல்கறை படிந்து தரமிழந்துபோய்விட்டனர் என்ற உண்மையை நாம் மீண்டும் கூற வேண்டிய அவசியமில்லை, தினந்தோறும் ஒவ்வொரு கணமும் ஊடகங்கள் வாயிலாகவும் தங்களுடைய சொந்த அனுபவங்களின் மூலமும் பொதுமக்களே இதைத் தெரிந்துகொண்டுள்ளனர்.

நடுநிலையைக் கடைபிடிக்க வேண்டிய அதிகார நிர்வாகமும் ஊழலில் திளைப்பதோடு அதுவும் அதற்கு சாதகமாக நடந்துகொள்கிறது. ஊழல், லஞ்சம், கமிஷன் பணம் போன்றவை எல்லாம் நிர்வாகத்தில் அன்றாட நிகழ்வுகள் ஆகிவிட்டன. முன்னணி ஏகபோக முதலாளிகளும் தொழிலதிபர்களும் ஊழல், சட்டத்தை வளைத்து சாதகமான ஆதாயம் பெறுதல், முறைகேடான பரிவர்த்தனை செய்தல் போன்ற குற்றங்கள் செய்தமைக்காக தலைப்புச் செய்திகளில் வருகின்றனர், ஆனால் என்ன செய்வது, அடுத்த கணமே எப்படியோ வெளியே வந்துவிடுகின்றனர். ஏன் ராணுவமும்கூடத் தப்பவில்லை; தரமற்ற சாதனங்கள் அல்லது உதிரிபாகங்கள் வாங்குவதற்காக ஒப்பந்தங்கள் செய்ததில் பெருமளவு பணம் கைமாறியதாகவும் அதில் மிக உயர்ந்த பதவிகளில் இருப்பவர்கள்கூட ஈடுபட்டனர் என்ற தகவலும் சமீபத்தில் வெளியானது.

இத்தகைய சூழ்நிலைகளாலும், சட்டத்தின் ஆட்சி பற்றிய முதலாளித்துவத்திற்கு ஆதரவானவர்களின் பரப்புரைகளாலும் ஏமாந்த மக்கள் தங்களது நம்பிக்கையை நீதித்துறையின் மீது வைக்கின்றனர். அங்குதான் தங்களுக்கு ஆறுதல் நீதி கிடைக்கும், தங்களுடைய பிரச்சனைகளுக்கு அங்குதான் தீர்வு கிடைக்கும் என்று மக்கள் இன்னமும் நம்புகின்றனர். ஆட்சியாளர்களும், இதை குறித்து வைத்துகொண்டு, இதையே நம்பும்படி மக்களைத் தூண்டுகின்றனர். ஆனாலும்கூட, கிழடுதட்டி காலாவதியாகிப்போன முதலாளித்துவ அமைப்பின் ஒரு அங்கமான நீதித்துறை சீரழிவிலிருந்து தப்பவில்லை.

### புனிதமான நீதித்துறையும் தரமிழப்பிலிருந்து பாதுகாக்கப்படவில்லை

நீதிமன்ற அனைத்து மட்டங்களிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது, அதன் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் லஞ்சம் ஒரு பங்கும் பகுதியுமாகிவிட்டது என்று நீண்டகாலமாகவே பேசப்பட்டு வருகிறது. இது நீதிமன்றத் தீர்ப்புகளையும் கூட பாதித்திருக்கக்கூடும். காலம் செல்லச்செல்ல, சமூகக் கடமை உணர்வை மீறும் சூழலில் இந்த சீரழிவுகள் மேலும் ஆழமாகத்தான் செய்யும். அதோடு சமீப காலங்களில், நீதிபதிகள் நியமனங்கள் உள்ளிட்ட நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உள்ளே அரசியல்வாதிகள்–அரசாங்கம் மற்றும் நிர்வாகத்தின் தலையீடும் சேர்ந்துவிட்டது.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமனம் செய்யாவிட்டால் ஆட்சிக்கான ஆதரவையே திரும்பப் பெறுவோம் என்று முந்தைய யுபிஏ அரசாங்கத்தை தமிழ்நாட்டின் பிரதான கட்சி மிரட்டிய தகவலை நீதிபதி கட்ஜூ வெளியிட்டதன்மூலம் நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கினார். யுபிஏ அரசாங்கமும் உச்ச நீதிமன்ற கொலிஜியமும் இந்த நிர்ப்பந்தத்திற்குப் பணிந்துள்ளன.

1973இல் இந்திராகாந்தி தலைமையிலான காங்கிரஸ்(ஐ) அரசாங்கம் அன்று இந்தியத் தலைமை நீதிபதியை எப்படி நியமனம் செய்தது என்பதை மக்கள் அவ்வளவு எளிதில் மறந்துவிட மாட்டார்கள். நாட்டில் நெருக்கடி நிலையை இந்திரா காந்தி அறிவிப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன்புதான் இந்த நியமனம் நடைபெற்றது. அதிகாரம் படைத்த இந்திராகாந்தியின் நடவடிக்கைகளுக்கு அன்று புதிதாக பதவிக்கு வந்த இந்தியத் தலைமை நீதிபதி வலுவான ஆதரவு தெரிவித்தார். எனவே அவரது தேர்வும், தேர்வு செய்த விதமும் நீதித்துறையிலும் தேசத்திலும் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தின.

இதுபோன்ற சம்பவங்கள் பல நடைபெற்றுள்ளன, அவற்றில் சிலவற்றை நாம் பார்க்கலாம். குடியரசுத் தலைவருக்கும் பிரதமருக்கும் எழுதிய கடிதத்தில் குஜராத் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி 'நான் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் பணியாற்றிய போது முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதியின் சகோதரி நீதிபதி அல்டாமஸ் கபிர் அவர்களை உயர்நீதிமன்ற நீதிபதியாக வருவதற்கு தான் எதிர்ப்புத் தெரிவித்தாலேயே தான் புறக்கணிக்கப்படுவதாக' தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் ஊழல் கறைபடிந்த நீதிபதி ஒருவரை உச்சநீதிமன்ற நீதிபதியாக தலைமை நீதிபதி கேஜி பாலகிருஷ்ணன் தலைமையிலான கொலிஜியம் கிட்டத்தட்ட முடிவு செய்துவிட்டதென்றும், நீதிபதி கட்ஜூ நேரடியாகத் தலையிட்டதால்தான் அது நிறுத்தப்பட்டதாகவும் நீதிபதி கட்ஜூ தனது வலை பக்கத்தில் தெரிவித்துள்ளார். இதே நீதிபதி பாலகிருஷ்ணனுக்குத்தான், சட்டவிரோதமாக 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள யுபிஏ அரசாங்கத்தின் முன்னாள் தொலைத்தொடர்பு அமைச்சர் டி ராஜா செய்த ஊழல் பற்றி உச்சநீதிமன்ற நீதிபதி கோகலே கடிதம் எழுதியுள்ளார். ஆனால் நீதிபதி கோகலேவுக்கு எழுதிய பதில் கடிதத்தில் ராஜாவின் பெயரையே நீதிபதி பாலகிருஷ்ணன் குறிப்பிடவில்லை. நீதிபதி பாலகிருஷ்ணனின் பெயரையும் பதவியையும் பயன்படுத்தி அவரது மகளும் மருமகனும் ஏராளமாக சொத்து குவித்ததாக எழுந்த புகார் கேரள அரசியலில் முன்பு புயலைக் கிளப்பியது.

இதுவரை இருந்த 16 முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதிகளில் பாதி பேர் ஊழல் கறைபடிந்தவர்கள் என்று மொரார்ஜி தேசாய் தலைமையிலான மத்திய அரசாங்கத்தில் மத்திய சட்ட அமைச்சராக இருந்தவரும் மூத்த வழக்கறிஞரும் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதியுமான சாந்தி பூஷன் 2010இல் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளார். அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் ஊழல் தலைவிரித்தாடுகிறது என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகளே தெரிவித்துள்ளனர். நீதிபதி கட்ஜூ மற்றும் ஞானசுதா மிஷ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு பிரிவு, இந்த உயர் நீதிமன்ற நீதிபதிகளின் உறவினர்கள் வழக்கறிஞர்களாக வாதாடி சாதகமான தீர்ப்புகளையும் பெற்றுள்ளனர், அந்த தீர்ப்புகளின் தன்மைக்கேற்ப ஏராளமான சன்மானங்களைப் பெற்றுள்ளனர் என்று அப்போது முடிவு தெரிவித்திருந்தது.

இப்படிப்பட்ட கண்டிக்கத்தக்க சூழ்நிலைகள் உருவானதைத் தொடர்ந்து நீதிபதி சிங்வி பின்வருமாறு விமர்சிக்க நேர்ந்தது; 'அரசியலில் ஊழல் மலிந்துவிட்டது, அதிகாரநிர்வாகத்தில் ஊழல் மலிந்துவிட்டது என்று கூறிவந்தோம், தற்போது நீதித்துறையிலும் ஊழல் மலிந்துவிட்டது என்று நாம் கூற வேண்டியுள்ளது'.

ஆனாலும் சீரழிவும் ஊழலும் முடிந்தபாடில்லை. சட்டமியற்றுபவர்களே மோசமான உதாரணங்களாகத் திகழ்கின்றனர். மிகப்பெரிய கிரிமினல்களாக, மிகப்பெரிய ஊழல்களிலும், பாலியல் வன்கொடுமைகளிலும்கூட ஈடுபடுகின்றனர். முக்கியமான நீதிமன்றத் தீர்ப்புகளையும் மீறி சட்டத்தின் ஆட்சியைக் கேள்விக்குறியாக்குவதற்கும் அவர்கள் தயங்குவதில்லை. இப்போது ஒரு வேதனையான கேள்வி எழுகிறது; பின் யார்தான் சட்டத்தின் ஆட்சியை உயிரோடு வைத்திருப்பது, சட்டமியற்றுபவர்களையும் உயர்மட்ட அதிகாரிகளையும் விசாரித்து தீர்ப்பளிப்பது யார்?

ஊழலுக்கு எதிரான மக்களது கருத்து ஒரு பெரிய இயக்கமாக வெடித்தெழும் வாய்ப்பு உருவாகும்போது, சூழ்நிலை இந்த அளவிற்கு கைமீறும்போது, நீதித்துறை அந்த சமயங்களில் அதீதமாக வேலை செய்து தனது அதிகார வரம்பையும் மீறி சட்டமியற்றும் மன்றம் மற்றும் நிர்வாகத்தின் மீது பாயலாம். நிர்வாகம்–அதிகார நிர்வாகம், ஏன் சட்டமியற்றும் மன்றங்களின் அதிகாரத்தை எடுத்துக்கொள்ள நீதித்துறை எத்தனிக்கும்போது அது ஜனநாயகத்தின் அடிப்படைக் கட்டமைப்பு அதிகாரத்தையே பாதிக்கிறது. ஆனால், நீதித்துறையின் வரம்பிற்கு உட்பட்டு நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகள் உண்மையிலேயே மக்கள் நலனுக்காக அமைந்தால் நிச்சயமாக மக்கள் அதை வரவேற்பர்.

ஆனால், ஊழலுக்கு எதிரான இதுபோன்ற நீதிமன்றத் தீர்ப்புகளையோ அல்லது ஏதாவது ஒரு நீதிபதியின் முன்முயற்சியையோ நம்மைப்போன்ற ஒரு முதலாளித்துவ அரசில் அதிகாரம் எப்படி சமமாகப் பராமரிக்கப்படுகிறது என்பதற்கான ஆதாரமாக தவறுதலாகப் புரிந்து கொண்டால் பின் அதல பாதாளம் வரை கெட்டுக்கிடக்கும் பூர்ஷ்வா ஜனநாயகத்தைப் பற்றிய ஒரு மாயையே ஒருவரிடம் ஏற்படும். இதனால் என்ன நடந்துவருகிறது எனில் ஊழல் உள்ளிட்ட தனது அனைத்து தீய குணாம்சங்களுடன் முதலாளித்துவ அரசு எவ்வித பாதிப்பும் இன்றி எப்போதும்போல் இருக்கிறது.

### நீதிபதிகள் நியமனத்திற்கு கொலிஜியம் அமைப்பு : நிர்வாகம் சட்டமியற்றுவோரின் தலையீட்டிற்கு ஒரு தடுப்பு

இத்தகைய பின்னணியில்தான் உயர் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனம் செய்வதில் கொலிஜியம் அமைப்பு பிறந்தது. இதற்கான மூலத்தை 'மூன்று நீதிபதிகள் தீர்ப்பு' என்று அழைக்கப்படக்கூடிய உச்ச நீதிமன்றத்தின் மூன்று தீர்ப்புகளில் காணலாம். 1981இல் வழங்கப்பட்ட முதல் நீதிபதிகள் தீர்ப்பில், உச்சநீதிமன்றம், 'நீதிபதிகளை நியமிப்பது 'முற்றிலும் மத்திய அரசாங்கத்திற்கு மட்டுமே' உள்ள அதிகாரம் என்றும் தேவைப்பட்டால் அது 'வெறும் அரசியலமைப்பு செயல்படுபவர்கள்' என்ற அளவில் இந்தியத் தலைமை நீதிபதி மற்றும் உச்ச நீதிமன்றத்திடம் கலந்தாலோசிக்கலாம் என்று தீர்ப்பு கூறியதன் மூலம் நீதிபதிகள் நியமனத்தில் நிர்வாகம் மற்றும் சட்டமியற்றும் மன்றங்களுக்கே முற்றான அதிகாரத்தை அளித்தது.

இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து நீதிபதிகள் நியமனத்தில் கடுமையான அதிகாரநிர்வாகத்தின் தாக்கம் அதிகமாக இருந்ததை அடுத்து, 1993இல் இரண்டாவது நீதிபதிகள் வழக்கில், முதல் நீதிபதிகள் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது, அதோடு உயர் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனம் செய்யும் பொறுப்பை பிரதானமாக இந்தியத் தலைமை நீதிபதியிடம் வழங்கியது, அதை அரசியலமைப்பு நோக்கத்தை சரிபார்த்து பூர்த்தி செய்வதற்காக மட்டும் அதிகாரநிர்வாகத்திற்கு அதிகாரம் வழங்கியது. இந்த தீர்ப்புதான் உயர் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனம் செய்வதற்கு கொலிஜியம் அமைப்பிற்கு இட்டுச் சென்றது, 1998இல் வழங்கப்பட்ட மூன்றாவது நீதிபதிகள் வழக்கு மூலம் செயல்வடிவம் பெற்றது.

நீதிபதிகள் நியமன செயல்முறைப் போக்கில் நிர்வாகத்தின் பங்கு முற்றிலும் நீக்கப்பட்டது, 'நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான உத்திரவாதமான பாதுகாப்பான நபராக' என இந்தியத் தலைமை நீதிபதி நிர்ணயிக்கப்பட்டார். நீதித்துறையின்மீது நிர்வாகம் தேவையில்லாமல் மூக்கை நுழைப்பதற்கு வைக்கப்பட்ட செக் என்று இது கருதப்பட்டது. எந்த ஒரு நீதிபதியையும் பாராளுமன்றம் கண்டிக்கின்ற உரிமை இருக்கிறது. இதை கண்காணித்து சமப்படுத்தும் நடவடிக்கையாகப் பார்க்கலாம். ஆனால், இனி இதைத்தவிர நீதிபதிகள் நியமனங்களில் நிர்வாகம் தலையிடுவதற்கான வாய்ப்பு இல்லாமல் செய்யப்பட்டது.

ஆனால், கொலிஜியம் அமைத்த உடனேயே பிரச்சினை முடிந்துவிடவில்லை. நாம் ஏற்கனவே விவாதித்தது போல் இந்த கொலிஜியம் அமைப்பிற்கு எதிராக அதன் நடுநிலைமை, திறமை, மற்றும் வெளிப்படைத்தன்மை குறித்து அடுக்கடுக்காக மிகவும் கடுமையான குற்றச்சாட்டுகள் எழுந்தன. மக்கள் அதிகம் நம்பி இருக்கக்கூடிய நீதித்துறையிலேயே

தொடர்ச்சி 8ம் பக்கம்




மாணவி மீது ஆசிட் வீசியதை கண்டித்து ஏஐஎம்எஸ்எஸ், ஏஐடிஎஸ்ஓவும் இணைந்து மதுரையில் 18.9.2014 அன்று நடத்திய ஆர்ப்பாட்டம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 27th October 2014

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2012-14
WPP Licence No:TNCCN/153/2012-14
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# உயர்மட்ட நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனம்...

7ம் பக்கத் தொடர்ச்சி

ஊழல் மலிந்துவிட்டதால் கொலிஜியம் அமைப்பின் மீது கேள்விகள் எழுப்பப்பட்டு அது சட்டமியற்றும் மன்றம்–நிர்வாகம்–நீதித்துறை ஆகியவற்றின் ஒப்பீட்டு அதிகாரம் குறித்த புதிய விவாதத்தை கிளப்பிவிட்டது.

## நெருக்கடியில்–சிக்குண்டிருக்கும் முதலாளித்துவத்திற்கு கட்டுக்கடங்கா அதிகாரம் தேவைப்படுகிறது, அது பாசிசத்தை நோக்கி செல்கிறது

முதலாளித்துவத்தின் இன்றைய மிகவும் நெருக்கடியான சூழலில், மற்ற அனைத்து முதலாளித்துவ நாடுகளில் இருப்பதைப் போன்றே, இந்திய முதலாளித்துவ அரசிலும் உள்ள ஆளும் ஏகபோக முதலாளிகளும் சக்திவாய்ந்த பன்னாட்டு கார்ப்பொரேட் முதலைகளும் நாட்டைத் தங்களுடைய முழுமையான பிடியில் வைத்திருக்க விரும்புகின்றனர் என்பதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. அவர்கள் தங்களுடைய திட்டங்கள் மற்றும் நலன்களுக்கான சேவை புரியும் துணை அமைப்புகளாகத்தான் அரசியல் கட்சிகளைப் பார்க்க விரும்புகின்றனர். அவர்கள் கொள்ளை லாபம் ஈட்டுவதற்கு வழிவகைகள் செய்து தருவதையே பிரதான மற்றும் முதன்மை நோக்கமாகக் கொண்டு அரசாங்கம் இருக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். எனவே அவர்கள் அதிக அதிகாரத்தை விரும்புகின்றனர்; எந்தவொரு எதிர்ப்பு வந்தாலும் அதனை தடுப்பதற்கு அவர்களது அரசியல் மேலாளர்கள், அரசாங்கங்கள், பூர்ஷ்வா அரசியல் தலைவர்கள், ஏன் சட்டமியற்றும் மன்றங்களும் நிர்வாகமும் மேலும் மேலும் கடுமையான அதிகாரங்களுடன் திகழவேண்டும் என்று விரும்புகின்றனர்.

ஏகபோக முதலாளிகளுக்கும் அவர்களது அடிவருடிகளான அதிகார–பேராசைபிடித்த முதலாளித்துவ அரசியல்வாதிகளுக்கும் சுதந்திரமான நீதித்துறை பெரும் தடையாகத் தெரிகிறது. எனவே அவர்கள் செய்யக்கூடிய தவறான ஒப்பந்தங்கள், சர்வாதிகாரம், நம்பிக்கை துரோகம் போன்றவை நீதிமன்றத்தின் பரிசோதனைக்கு உட்படாமல் இருக்கக் கூடிய வகையில் அவர்களுக்கு அனுசரித்து செல்லக் கூடிய அல்லது குறைந்த பட்சம் 'தீங்கிழைக்காத' நீதிபதிகள், அவர்களுக்கு சேவை செய்யக்கூடிய கடமைப்பட்டுள்ள நீதித்துறையை எதிர்பார்க்கின்றனர். நீதித்துறையில் அதிகரித்துவரும் ஊழல் சம்பவங்கள் இவர்கள் அதில் மூக்கை நுழைப்பதற்கும் அதன் ஒப்பீட்டளவிலான சுதந்திரத்தைப் பறிப்பதற்கும் மக்களிடம் எந்த கோபத்தையும் வரவழைத்துவிடாமல் நீதித்துறையை நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கும் எளிய வாய்ப்பாகிவிட்டது.

ஆனால் இதற்கு, அனைத்து ஓட்டைகள் மற்றும் பற்றாக்குறைகள் இருந்தாலும், நீதித்துறையின் ஒப்பீட்டளவிலான தன்னாட்சியும், நீதிபதிகள் நியமனத்தில் பின்பற்றப்படும் கொலிஜியம் அமைப்பும் தடையாக இருக்கின்றன. எனவேதான் இதை ஒழித்துவிட்டு நிர்வாகத்தின் முழு கட்டுப்பாட்டில் இருக்கும் கமிசனுக்கு ஆதரவாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தனிப் பெரும்பான்மையுடன் பாஜக ஆட்சியில் இருப்பது, தங்களுடைய திட்டத்தை சுலபமாக நிறைவேற்றுவதற்கு ஆளும் வர்க்கத்திற்கு, ஏகபோக முதலாளிகளுக்கும் கார்ப்பொரேட்டுகளுக்கும் வாய்ப்பாகிவிட்டது. பாஜக பிரதமர் நரேந்திர மோடியை தங்களுடைய வர்க்க நலன்களுக்குச் சேவகம் புரியும் வலுவான நிர்வாகியாக, தங்கள் விருப்பத்திற்கு இந்த நாட்டைக் கொள்ளையடிப்பதற்கு வரக்கூடிய எந்த ஒரு எதிர்ப்பையும் போராட்டத்தையும் அடக்க வல்லவராக, மக்களது ஒற்றுமையை ஏதாவது வக்கிரமுறையில் சீர்குலைக்கும் அளவிற்கு நயவஞ்சகம் செய்வதில் வல்லவராக ஆளும் வர்க்கம் கருதுகிறது. இப்படிப்பட்ட ஒருவரின் தலைமையின் கீழ் இயங்கும் அரசாங்கம் உள்ளதைப் பயன்படுத்தி நீதித்துறையின் சுதந்திரத்தைத் தடுப்பதற்காகவும், 'அதிகாரப் பகிர்வு' என்ற அந்த அடிப்படைக் கோட்பாட்டையே மாற்றி அமைத்து எல்லா அதிகாரமும் நிர்வாகத்திற்கே என்று கொண்டு வருவதற்கும் சாதுர்யமாகத் திட்டமிட்டு காய்கள் நகர்த்தப்படுகின்றன. இந்த தொடர்ச்சியான நிகழ்வுகள் அனைத்தும் இதற்கே சான்றாக விளங்குகின்றன.

நாம் முன்பே விவாதித்தபடி கோபால் சுப்பிரமணியம் ஒரு அனுசரனையானவர் என்பதை நிரூபிக்காததால்தான் உச்ச நீதிமன்ற கொலிஜியம் சமர்பித்த பெயர் பட்டியலில் இருந்து அவரது பெயரை நீக்குவதற்கும் காரணமாக இருந்தது. அதற்குப் பின்னர்தான் இதற்குத் தகுந்த மசோதாக்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவையின் ஆதரவோடு அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டன. இந்த நடவடிக்கைக்கு எந்தவொரு பெரிய எதிர்ப்பும் வரவில்லை, ஊழலில் திளைத்துவரக்கூடிய, அதிகாரம் மற்றும் வசதிகளுக்காக பேராசை கொண்ட, அதற்காக ஆளும் ஏகபோக முதலாளித்துவவாதிகளுக்கு அடிவருடி சேவகம் உற்சாகத்தோடும் விருப்பத்தோடும் பணிபுரியும் பெரிய பாராளுமன்ற கட்சிகள் அனைத்தும், நிர்வாகத்தின் கட்டுப்பாட்டை வலிமைப்படுத்துவதற்கு தங்களது ஆதரவை வழங்கின. தேசிய அளவில் எந்தவொரு விவாதத்திற்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

எந்த ஆழமான விளக்கமும் தரப்படவில்லை. இந்த ஒட்டுமொத்த விளையாட்டும், ஏகபோகங்கள்–கார்ப்பொரேட்டுகளால் வடிவமைக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டு மேற்பார்வையிடப்பட்டு கோடிக் கணக்கான பணம் செலவழிக்கப்பட்டு நடைபெற்ற தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற அதிகாரத்தின் மூலம் திட்டமிடப்பட்டு நடத்தி முடிக்கப்பட்டன. மக்கள் கருத்தே மேன்மையானது முடிவானது என்று பூர்ஷ்வா ஜனநாயகத்தின் அடிப்படை அம்சம் எச்சரிக்கை மணி அடிக்கும் விதமாக காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்றவுடன் முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதி சதாசிவம் கேரளா ஆளுநராக நியமிக்கப்பட்டது இனி நாளை என்ன நடக்கும் என்பதைக் காட்டுவதாக உள்ளது. இதிலும் கூட அரசாங்கம் நடந்துகொண்ட விதம் மிகவும் முக்கியமான அம்சமாகும். இதில் அப்பதவிக்கு வரும் நபர் நேர்மையானவரா அல்லது தகுதியானவரா அல்லது அமித் ஷா வுக்கு எதிரான இரண்டாவது எஃப்ஐஆர்ஐ ரத்துசெய்த உச்ச நீதிமன்ற அமர்வில் உறுப்பினராக இருந்த சதாசிவம், அமித் ஷாவை விடுத்தபோது சட்ட வழிமுறைகளை சரியாகப் பார்த்துதான் வழங்கினாரா என்பதல்ல கேள்வி. நீதிபதிகளாக இருந்தவர்களை அவர்களது ஓய்விற்குப் பிறகு இதுபோன்ற அலங்கார பெருமைக்குரிய பதவிகளில் நியமனம் செய்தால், அது அவர்கள் முன்பு வகித்த பதவியை விட குறைந்த மதிப்புடையதாக இருந்தாலும் கூட, ஓய்வுபெற்ற பின்னர் பதவி கிடைக்க வேண்டும் என்ற நப்பாசையோடு அப்போது இருக்கும் அரசாங்கத்திற்கு ஆதரவாக, 'அனுசரனையாக' அல்லது 'தீங்கிழைக்காத' நீதிபதிகளுக்கு அது ஒரு ஊக்கப்பரிசாக அமைந்துவிடும், இதுவும் ஒருவகையில் நீதித்துறையின் சுதந்திரத்தை சீர்குலைப்பதுதான்.

## விழிப்புணர்வுள்ள ஒன்றுபட்ட மக்கள் இயக்கங்களால் மட்டுமே ஊழல் சீரழிவைத் தடுத்து நிறுத்த முடியும்

ஜனநாயக அரசு என்று அழைக்கப்படக் கூடிய இந்தியாவில் நீதித்துறைக்கு இதுவரை இருந்து வந்த ஒப்பீட்டளவிலான குறைந்தபட்ச சுதந்திரத்தையும் நீதித்துறை இழக்கும் சூழல் உருவாகியுள்ளது. நீதித்துறையில் ஊழலும் சீரழிவும் வந்துவிட்டது என்பதால் அது நிர்வாகத்தின் அதிகாரத்திற்கு கீழ்ப்படியக் கடமைப்பட்டது என்று நியாயப்படுத்த முடியாது. இது ஏற்கனவே மங்கிவரும் பூர்ஷ்வா ஜனநாயகத்திற்கு மேலும் சீரழிவையே ஏற்படுத்தும், இதன் விளைவாக நிர்வாக பாசிசத்திற்கான மடைக்கதவை திறந்துவிடும். ஊழலும் சீரழிவும் இந்த கிழடுதட்டி அழுகிப்போன முதலாளித்துவ சமூகமே உருவாக்கி வழங்குகிறது என்பதை மீண்டும் நினைவூட்டுவது அவசியமாகிறது.

இந்த நாட்டில் சுரண்டல் முதலாளித்துவ ஆட்சிக்கு முடிவுகட்டுவதற்காக உள்ள புரட்சிகர சக்தியாகிய, எமது கட்சி, சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்) இதை பலமுறை சுட்டிக்காட்டியுள்ளதோடு, ஒன்றுபட்ட நீடித்த வெகுஜன இயக்க நடவடிக்கை மூலம் ஏற்படுத்தப்படும் குவிக்கப்படும் அழுத்தம் மூலமாகத்தான் ஊழல் மற்றும் சீரழிவு என்ற இந்த கொடிய நோய் பரவுவதைத் தடுக்க முடியும் என்றும் வலியுறுத்தி வருகிறது. எப்போதெல்லாம் மக்களுடைய தீவிர கண்காணிப்பு வலுவான அழுத்தம் தருகிறதோ, உயர்ந்த நீதிநெறி மற்றும் விழுமியங்களின் அடிப்படையில் ஒன்றுபட்ட ஒன்றிணைக்கப்பட்ட வெகுஜன இயக்கங்களின் வடிவில் மக்கள் அதிகாரம் நிலைநிறுத்தப்படுகிறதோ அப்போதெல்லாம் பெருமளவு ஊழல், உரிமைகள் பறிப்பு, ஜனநாயக முறைகளையும் நியதிகளையும் தகர்த்தல் போன்றவை ஓரளவோ அல்லது பெருமளவோ தடுக்கப்படுகிறது.

இத்தகைய இயக்கங்களை மேலும் துரிதப்படுத்த வேண்டும், குறிப்பாக நீதித்துறையின் ஒப்பீட்டளவிலான குறைந்தபட்ச சுதந்திரத்தையும் தடுத்து அதை கிட்டத்தட்ட ஆளும் ஏகபோக முதலாளிகளின் கைப்பாவையாக மாற்றுவதற்கான முயற்சிகள் புதுப்பிக்கப்பட்ட உக்கிரத்தோடு நடைபெற்று வருகையில், இது போன்ற இயக்கங்களை மேலும் உக்கிரத்தோடு வளர்த்தெடுக்க வேண்டும். அத்தகைய இயக்கம் இல்லாத வேளையில், அதிகாரம் ஏற்கனவே உள்ள இடத்தில் அது கட்டுப்படுத்த முடியாத அளவற்ற அதிகாரமாகிவிடும். இதனால் எந்தவித எதிர்ப்பும் இன்றி நீதித்துறையை தங்களுக்குக் கடமைப்பட்டுள்ள அங்கமாக மாற்றும் மிகவும் கொடிய விளைவுகளை வெற்றிபெறச் செய்துவிடும். தேசிய நீதிபதிகள் நியமன கமிஷன் ஏற்படுத்தப்படுவதில் பொதிந்துள்ள மிகவும் அபாயமான அம்சம் இதுதான்.

## செப்டம்பர் 11, 2014
## பாரதி 93வது நினைவு தினம் அனுஷ்டிப்பு




மதுரையில் பாரதியின்
93வது நினைவு தின கூட்டம்




நெய்வேலியில் பாரதியின்
93வது நினைவு தின கூட்டம்

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு - வெளியிடுபவர்: வி.பி.நந்தகுமார். அலுவலகம் : பு.எண். 16 (ப.எண். 18), இராட்லர் தெரு சூளை, சென்னை 600 112, அச்சகம் : அய்யனார் ஆப்செட், நெ.10, சுப்பராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094. ஆசிரியர் : வி.பி.நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucic.in